Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

Vol 7 இதழ் 98

National Tamil Daily

தேசிய தினசரி

(20-5-65)

விசுவாவசு வைகாசி 7 முஹர்ரம் பிறை 18 வியாழக்கிழமை

அவசரதந்தியின் ஆமை வேகம்

கொழும்பு, புதன்

22 500 அவசரத்தந்திகளும் சாதாரண தந்திகளும்தபால் மூலம் கொழும்பில் இருந்து இலங்கையின் பல பகுதிகளுக்கும் அனுப்பப்பட்டன. இத் தந்திகள் மே மாதத்தில் 7 நாட்களுக்குள் அனுப்பப்பட்டதாம் இந்த விபரங்கள் யாவும் உத்தியோகப் பூர்வமான புள்ளிவிபரமாக தந்திச்சேவை, தினைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளன

இது இப்படியிருக்க ஒரு நாள் இரவு 8338 தந்திகள் அனுப்பமுடியாது மறுநாள் காலையே வேண்டிய வேண்டிய இடங்களுக்கு அனுப்பப்பட்டனவாம். இப்படி அனுப்பட்ட தந்திகளில் யாழ்ப்பாணம், காலி, நுவரேலியா முதலிய தபால் நிலையங்கள் கூடுதலாக தந்திகளை தபால் மூலம் பெற்றதில் முதல் இடத்தை எடுக்கின்றன.

இதே காலத்தில் 2855 அவசரத் தந்திகளும் பத்திரிகைத் தந்திகளும் இந்தியாவிற்கு விமானத்தபால் மூலம் அனுப்பப்பட்டன தந்திகள் தபால் மூலம் அனுப்பப்பட்ட போதிலும் தந்தியில் அனுப்புவதற்காக பெற்ற தொகையை அரசாங்கம் திரும்பி கொடுப்பதில்லை, தந்தி அனுப்புபவர்களுக்கு தந்தி, தபால் மூலமாக அனுப்பப்பட்டதாக தெரிவிப்பதில்லை.

"வட்டமேசை மகாநாடு எதற்கு? உடன்பாடு தெரிந்த பின்பும் உபத்திரவமா"

அச்சுவேலி வரவேற்பில் ஊர்காவற்றுறை எம். பி.

யாழ்ப்பாணம், வியாழன்

"ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தமிழரசுக் கட்சிக்கும் ஏற்பட்ட உடன்பாடு பற்றிய விபரங்கள் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க்காங்கிரஸ் தலைவருக்கு நன்கு தெரியும். அதை அறிந்துகொண்டுதான் அரசாங்கத்துக்கு அவர் ஆதரவளிக்கிறார். உடன்பாடு என்னவென்று தெரிந்த பின்னர்தான் சிம்மாசனப் பிரசங்கத்தை ஆதரித்து வாக்களித்தார். இதன் பின் வட்டமேசை மகாநாடு என்று கூறுவதன் அர்த்தம் என்ன? பண்டா—செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்துக் குழப்பியதைப் போன்று இப்பொழுதுள்ள நல்ல சூழ்நிலையையும் கெடுப்பதுதானா நோக்கம்" என்று தீவுப்பகுதி எம். பி. திரு. வி. நவரத்தினம் நேற்று முன்தினம் இரவு அச்சுவேலியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசுகையில் கேட்டார்.

கோப்பாய்த் தொகுதி எம் பி. திரு. சி. கதிரவேலுப் பிள்ளைக்கு அச்சுவேலியில் அப்பகுதிமக்கள் வரவேற்பளித்தனர். ஆவரங்கால் சந்தியிலிருந்து திரு. கதிரவேலுப் பிள்ளையும் மற்றும் தமிழரசுக் கட்சிப் பிரமுகர்களும் ஊர்வலமாக அச்சுவேலி தம்பாலைமைதானத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். ஊர்வலத்தில் பொம்மலாட்டம் வாணவேடிக்கை ஆகியனவும் இடம் பெற்றன. இரவு ஒன்றரை மணிவரை நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டனர்.

திரு. வி. நவரத்தினம் மேலும் பேசுகையில், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையில் ஏற்பட்டுள்ள சௌஜன்ய உறவையும் நாட்டில் இன்று தோன்றியுள்ள நல்ல சூழ்நிலையையும் கெடுக்காமலிருக்கும்படி வேண்கோள் விடுத்தார். நல்ல சூழ்நிலையைக் கெடுக்க சிலர் முயற்சி செய்வதாகத் தோன்றுவதாகவும் இவ்வித செய்கையால் தமிழ்ப் பேசும் மக்களின் இழந்த உரிமைகளைப் பெறுவதற்கு இடையூறு செய்வதாகவே முடியுமென்றும் கூறினார்.

இத்தகைய வரவேற்புகள் மகிழ்ச்சியளிக்கக் கூடியவையானாலும் தமிழ் பேசும் மக்கள் விழிப்புடனிருக்கவேண்டும் என்று திரு. நவரத்தினம் கூறினார்.

(பக்கம் பார்க்க)

தனிச் சிங்களத்தில் சம்பளப் பட்டியல்

மத்திய வங்கி நடவடிக்கை பற்றி எஸ். ஜே. வி. ஆட்சேபம்

பம்பலப்பிட்டி, புதன்

மத்திய வங்கி, சம்பளப் பட்டியல் தயாரிக்கும் விஷயத்தில் தேசிய அரசாங்கத்தின் கொள்கைகளுக்கேற்ப நடந்து கொள்ளவில்லையென்றும் முந்திய அரசாங்கம் ஆட்சியிலிருந்தபோது நடைமுறையிலிருந்த விதிகளைப் பின்பற்றத் தவறிவிட்டது மோசமான தொன்று என்றும் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகம் மத்திய வங்கிக் கவர்னர் திரு. டி. டபிள்யு ராஜபத்திராவுக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிங்களத்தில் தேர்ச்சிபெறாதவர்கள் விஷயத்தில் மத்திய வங்கி நடந்துகொள்ளும்விதம் பற்றி ஆட்சேபம் தெரிவிக்கு முகமாக எழுதிய கடிதத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

திரு. எஸ். ஜே. வி. தமது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளாவது:

சிங்களத்தில் தேர்ச்சிபெறாதவர்களுக்குச் சிரமமிருக்காத வகையில் அவர்களுக்கு வசதியாக அரசாங்க இலாகாக்கள் உத்தியோகபூர்வமான மொழி பெயர்ப்பைச் சம்பளப் பட்டியலில் சேர்க்கின்றன. இதனை விடுத்து மத்திய வங்கி தற்போது கடைப்பிடித்துவரும் கொள்கை சிங்களத்தில் தேர்ச்சிபெறாதவர்களுக்கு இக்கட்டான நிலையை உருவாக்குவதாக உள்ளது.

மத்திய வங்கி ஊழியரின் சம்பளப் பட்டியல் ஊழியர்களின் ரயில்வே வாரண்டுகளுக்கான விண்ணப்பப் பத்திரங்கள், வீவுகளுக்கான மனுப்பத்திரங்கள் ஆகியவையெல்லாம் ஆங்கிலத்திலும் தமிழிலுமிருப்பது தமிழ் ஊழியருக்கு நல்லதாக இருக்குமென திரு. எஸ். ஜே. வி. கருத்துத் தெரிவித்துள்ளார்.

"பிரிட்டிஷ் யோசனை முன்னேறி வருகிறது"

கட்ச் நிலை பற்றி கருத்து

புதுவர்லி, மே 19

கட்ச்சிந்து எல்லையில் பாகிஸதான் துருப்புக்களைக் குவித்துவரும் அதேவேளையில், மற்றும் பல எல்லைகளில் கட்டு வருகிறது என அறிவிக்கப்பட்டது.

திரிபுராவில் வெலோனிகா நகரில் வெள்ளப்பாதுகாப்பு வேலைகளைச் செய்து வரும் தொழிலாளர்கள் மீது அவர்கள் அகாரணமாய்ச் சுட்டு வருகிறார்கள்.

இதற்கிடையில் பிரிட்டிஷ் யோசனை இப்போது மிகவும் முன்னேறி நுட்பமான முறையில் இருப்பதாகத் தெரிகிறது.

பிரிட்டனின் கடைசி யோசனை கடந்த சனிக்கிழமை சமர்ப்பிக்கப்பட்டதென்றும், இதற்கு இந்தியா பதிலனுப்பிவிட்டதாவும் கூறப்பட்டது.

ஆனால் இந்த யோசனை ஏற்கப்பட்டதா, அல்லது நிராகரிக்கப்பட்டதா எனக் கூறப்படவில்லை.

நேற்று பிரிட்டிஷ் ஹைகமிஷனர் உள்நாட்டு மந்திரி திரு. நந்தாவைச் சந்தித்துப் பேசினார்.

ஆசிரியர் தூதுகோஷ்டியை மந்திரி சந்திப்பார்

கொழும்பு, புதன்

ஸ்ரீலங்கா ஜாதிககுருசங்கத்தின் தூதுகோஷ்டியொன்றை கல்விமந்திரி நாளை சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடாத்துவார்எனத் தெரியவருகிறது. கடந்தபொதுத்தேர்தலில் ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபட்டதன்காரணமாக தற்பொழுது தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்கள் நிலைமைபற்றி இப்பேச்சுவார்த்தையின்போது பிரஸ்தாபிக்கப்படும் எல்லாமாக தற்பொழுது 19 ஆசிரியர்கள் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இந்த தற்காலிகவேலைநீக்கத்தைத் எதிர்த்து ஸ்ரீலங்கா ஜாதிககுருசங்கத்திற்கு ஆதரவுகொடுக்கும்முகமாக பல தொழிற்சங்கங்கள் ஒன்றுகூடி முடிவுசெய்துள்ளன

—

இஸ்ரேல் உளவாளிக்கு தூக்கு

டமாஸ்கஸ், மே 19

சிரியாவில் இஸ்ரேல் உளவு கோஷ்டி ஒன்றுக்கு தலைமை வகித்த எலிகோஹன் நேற்று காலை பகிரங்கமாகத் தூக்கிலிடப்பட்டார்.

40 வயதான கோஹன்தான் சிரியாவில் தூக்கிலிடப்பட்ட முதலாவது இஸ்ரேலி ஆகும். அவர் தூக்கிலிடப்படும் போது கழுத்திலுள்ள கயிறு வழுக்கி கீழே விழுந்தார். பின் ஒரு நாற்காலியின் உதவி மூலம் மேலே ஏற அவருக்கு வசதி செய்யப்பட்டது.

தனது மனைவி நாடியாவுக்கு அவர் கடிதம் ஒன்றை எழுதி வைத்திருந்தார். அவனை மறுமணம் செய்து கொள்ளுமாறும், தனது மூன்று குழந்தைகளையும் தந்தையில்லாத அனாதைகளாக்கி விடவேண்டாம் என்றும் கடிதத்தில் அவர் கூறியிருக்கிறார்.

புதிய சௌட்சபைத் தலைவர்

கொழும்பு, புதன்

இவ்வருடம் அக்டோபர் மாதம் காலியாகும் சௌட்சபைத்தலைவர் பதவிக்கு முன்னாள் பிரதம நீதியரசர் திரு. ஹேமா பஸநாயக்கா தெரிவு செய்யப்படக் கூடுமென்றும் அவர் முதலில் சௌட்டராக நியமிக்கப்படலாமென்றும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

—

தாய்லாந்தின் உதவி

கொழும்பு, புதன்

இலங்கையில் நிலவும் அரிசிப் பற்றாக்குறையைத் தீர்க்க தாய்லாந்து உதவ முன்வந்துள்ளது.

தாய்லாந்திலிருந்து உத்தியோகபூர்வமான வர்த்தக தூதுகோஷ்டியொன்று இது சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த நாளை இங்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

—

பிரதமரும் பொதுமக்களும்

பம்பலப்பிட்டி, புதன்

சென்ற திங்கட்கிழமை மட்டும் பிரதமர் டட்லி சேனநாயக்காவை அவரது வாசஸ்தலத்தில் 742 பேர் சந்திக்கச் சென்றனர். தினமும் 150 பேர் பிரதமரைச் சந்திக்கச் செல்கின்றனர். இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து பிரதமரைச் சந்திக்கக் கோஷ்டியாகவும் தனியாகவும் பொதுமக்கள் செல்கின்றனர். அநேகமாக மாற்றங்களிலும் நியமனங்களிலும் பிரதமரின் உதவியை நாடியே இப்பொதுமக்கள் அவரிடம் செல்கின்றனர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

ஏழைகளைச் சுரண்டித் தங்கள் செல்வத்தைப் பெருக்கிக் கொள்வதை செல்வந்தர்கள் வெறுக்கும் காலம் வருமென்று நம்புகின்றேன். அப்போது ஏழைகளும் செல்வந்தரைக் கண்டு பொறாமைப் படமாட்டார்கள். உலகில் வேற்றுமைகள் இருக்கத்தான் செய்யும். ஆனால் மனக்கசப்பும் வெறுப்பும் ஏற்படாமல் தடுக்கவேண்டும். ஏழைகளுடன் பணக்காரர் நட்புடன் வசிப்பதற்கும் பல உதாரணங்களைச் சொல்லலாம். அவ்வித உதாரணங்களை நாம் பெருக்க வேண்டும்.

— மகாத்மா

ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

[illegible] விசுவாவசு ஆண்டு வைகாசி மீ 7 உ. (20-5-65)

விலை உயர்வும் வாழ்க்கைச் செலவும்

இறக்குமதியிலும் வர்த்தகத்திலும் தனியார் துறைக்கு நியாயமான பங்கு அளிக்கப்படும் என்று அரசாங்கமும் அமைச்சர்களும் பேர்தியளவு வாக்குறுதியளித்துள்ளனர். எனவே தனிப்பட்ட வர்த்தகர்கள் வாழ்க்கைச் செலவு உயராமல் தடுக்கும்பொருட்டு பொருள்களைப் பதுக்குவதையும் கொள்ளை லாபமடிப்பதையும் தவிர்த்துக் கொள்வதன்மூலம் பொதுமக்களின் நல்லெண்ணத்தை தனிப்பட்ட வர்த்தகர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். தனிப்பட்ட வர்த்தக ஸ்தாபனம் ஒன்று பெருமளவில் 'டோர்ச்லைட்பாட்டரி'களை இறக்குமதி செய்து பதுக்கி வைத்துப் பின்னர் ஒரு 'பாட்டரி' 95 சதவீதமாக விற்று அதன்மூலம் 50 சதம் கொள்ளை லாபமடித்தது என்று வர்த்தக மந்திரியே தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற ஒழுங்கீனங்களை நிறுத்தவோ கட்டுப்படுத்தவோ சட்டரீதியான அல்லது அரசாங்கக் கட்டுப்பாடு எதுவும் இல்லையா? நேற்று வெளியான ஒருசெய்தி உண்மையாக இருப்பின், பதுக்கலையும் கொள்ளை லாபத்தையும் தடுப்பதற்கு கட்டுப்பாடற்ற இறக்குமதி தான் ஒரே மார்க்கம் என்று வர்த்தகமந்திரியும் கருதுவதாகத் தெரிகிறது.

இருநூறுகோடி ரூபாய் அந்நிய செலாவணி கிடைத்தால் தான் வாழ்க்கைச் செலவு உயர்வைக் குறைக்க முடியுமென்று யோசனை கூறப்படுகிறது. இலங்கையைப்போன்ற அபிவிருத்தி குறைந்த ஒரு நாடு இவ்வளவு பெரிய தொகையை அந்நிய செலாவணியாகப் பெறுவதற்கு என்ன வழிவகைகள் உண்டு? கட்டுப்பாடற்ற இறக்குமதியினதும் உள்நாட்டு உற்பத்தியினதும் கதி என்ன? அரசாங்கம் தனது பொருளாதார அபிவிருத்திக் கொள்கையை விரைவில் வகுத்துக் கொள்ள வேண்டும். கைத்தொழில் அபிவிருத்தி, உள்நாட்டு உற்பத்தி பற்றிய தனது திட்டத்தை அரசாங்கம் விரைவில் தயாரித்துக் கொள்ள வேண்டும். கட்டுப்பாடற்ற, ஒழுங்குமுறையற்ற இறக்குமதிக் கொள்கையை எந்த நவீனநாடும் கைக்கொள்ளவில்லை. அபிவிருத்தி குறைந்த ஆசியநாடுகளில் குறிப்பாக ஜனநாயக நாடுகளில் தனிப்பட்ட மொத்த வியாபாரிகளும் வர்த்தகர்களும் பொருள்களைப் பதுக்கல் செய்வதும் கொள்ளை லாபமடிப்பதும் பெரும் பிரச்னையாகவுள்ளது. இந்தியாவில் உணவுப் பொருள்களில் கூட வர்த்தகர்களின் பதுக்கலும் கொள்ளை லாபமும் பெருந்தொல்லையாக இருந்திருக்கிறது. இவைகள் இலங்கைக்கு ஒரு பாடமாக இருக்கவேண்டும். இங்கு கொள்ளைலாபமடிப்பதையும் பதுக்கல்செய்வதையும் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

வாழ்க்கைச்செலவைக் குறைப்பதற்கு இரண்டு வருட அவகாசம் தேவையென வர்த்தகமந்திரி தெரிவித்துள்ளதாக ஒருசெய்தி கூறுகிறது. இதுவிஷயத்தில் துரித நடவடிக்கை எடுக்கப்படாவிடில் இறுதியில் அரசாங்கத்துக்கு அவப்பெயர் கிடைக்கநேரிடும்.

பால்உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் மிகவும் அதிகரித்துள்ளனவென்பது பலரும் அறிந்த உண்மை. இவ்விதம் தங்கள் நாடுகளில் நடக்கமுடியாது என மார்க்ஸீயவாதிகள் கூறக்கூடும். ஜனநாயகத்தினதும் சுதந்திரத்தினதும் மதிப்பு இதுதானா? இதுபற்றி அரசாங்கமும் மந்திரிசபையும் கவனம் செலுத்தவேண்டும்.

மகாராணிக்கு விருந்துபசாரம்

மே. பேர்லின் மே 19

பிரிட்டிஷ் மகாராணி எலிஸபெத்துக்கும், அவரது கணவருக்கும் இங்கு பெரும்ஆடம்பரமான ராஜாங்க விருந்தும், வரவேற்பும் அளிக்கப்பட்டன. 8000 கனதிமான விருந்தினர்கள் இதில் கலந்துகொண்டனர்.

வேலை வாய்ப்பு

பம்பலப்பிட்டி, புதன்

எதிர் வரும் ஐந்து வருடங்களுக்கு கூட்டு ஸ்தாபனங்களில் எவ்வளவு பேர்களுக்கு உத்தேசமாக வேலைவசதிகள் கொடுக்க முடியும் என்ற விபரமான ஒரு அறிக்கையை தனக்கு கொடுத்துதவும்படி தொழில்மந்திரி திரு எம். எச். முகம்மது எல்லா கூட்டுஸ்தாபனங்களின் தலைவர்களையும் கேட்டுள்ளார்.

கூட்டு ஸ்தாபனத்தின் திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு எந்த வகையில் உதவி வேண்டியிருக்கின்றதென்பதையும் தனக்கு தெரிவிக்கும்படி மந்திரி மேலும் கேட்டுள்ளார்.

கூட்டு ஸ்தாபனத்தின் காலிஸ்தானங்களை நிரப்புவதற்கு இனிமேல் தொழிற்கந்தோர் மூலமே வேலைகள் வழங்கப்படவேண்டும் என்றும் மந்திரி கூட்டுஸ்தாபனங்களுக்கு அறிவித்துள்ளார். தொழிற்கந்தோர் மூலம் நிரப்பமுடியாத ஸ்தானங்களுக்கே விளம்பரம் செய்து மனுப்பத்திரங்கள் கோரப்படவேண்டும் என்று கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

லாபமா? நஷ்டமா?

வடபகுதி வெங்காயச் செய்கைக்கு ஏற்றதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது. வடபகுதி விவசாயிகளும் கூடிய அளவு வெங்காயச் செய்கையை விருத்தி செய்து வருகின்றனர். விவசாயிகட்கு தற்போது வெங்காயச் செய்கையால் நஷ்டமேற்படுமாயின் அது பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களின் கொள்வனவு முறையும் ஆனை பிறவுத்தடையுமே காரணமாக இருக்க முடியும். அது தவிர 18-5-65 ஈழநாடு தினசரியில் திரு. செந்தில்நாதன் கூறிய காரணங்கள் சரியென ஒப்புக்கொள்ள முடியாது. அவரின் விளக்கப்படி செய்ய மிதமானது. 4-ம் 7-ம் விளக்க செலவினம் ஒரே செலவினமே.

நான் எனது செய்கை முறையில் கிடைத்த வருமானத்தை விபரமாகத் தருகிறேன். எனது பகுதியில் 2 போக வெங்காயம் நடுகை செய்கிறோம். ஒன்று கார்த்திகை மாச நடுகை மற்றையது வைகாசி மாச நடுகையாகும். செய்கை முறை இரு போகத்திற்கும் ஒரே மாதிரி இருப்பினும் கார்த்திகை மாச நடுகைக்கு விதை வெங்காயம் 1000 கண்டு நடும் நிலப்பரப்பு 3 7/8 க்கு 8 அந்தர் போதுமானது அத்துடன் வெங்காயப் பனிப் பூச்சியை அழிப்பதற்கு கிருமிநாசினி செலவுமுண்டு. வைகாசி போக நடுகை திரு. செந்தில்நாதன் குறிப்பிட்ட படியே இதில் எனது செய்கை முறை.

மாட்டெரு 1/2 லொறி	ரூ.	150-00
2 வண்டில் குழை	ரூ.	100-00
நிலம் கொத்துவதற்கு 5 கூலி ×5	ரூ.	25-00
பாத்தி கோலி செப்பனிட 3 கூலி ×5	ரூ.	15-00
விதைவெங்காயம் 5 அந்தர் × 26-00	ரூ.	150-00
" நடுகைக்கூலி 12 பெண் ×2	ரூ.	24-00
1-ம் களை பிடுங்க 12 " "	ரூ.	24-00
2-ம் " 8 " "	ரூ.	16-00
அறுவடை 5 " "	ரூ.	10-00
வெங்காயம் துப்பரவு செய்ய 50 கூலி	ரூ.	100-00
நீரிறைக்க 80 நாட்கள் 4 நாளு நாட்களுக்கு ஒரு முறை போதுமானது 20×5		100-00
		714-00

நல்ல விளைவு 1×16 அல்லது 1×12		
சராசரி விளைவு 1×8×6=48 அந்தர்		
ஆகக்குறைந்தவிலை 48×22	=	1056-00
மொத்தச் செலவு		714-00
சுத்த லாபம்		342-00

வெங்காயச் செய்கையால் லாபம் என்பது மறுக்க முடியாது. ஆனால் மாற்று முறை செய்கை கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். இன்னும் செயற்கை உரம் பாவித்தால் கூடுதல் விளைவு கிடைக்கும்.

—ந. புலேந்திரன்

துணுக்காய்;

ஃ ஃ ஃ

வெங்காயச் செலவு

13-5-65ம் திகதி ஈழநாட்டில் வெளியான வெங்காயச் செய்கையில் உள்ள செலவினங்களில் நான்காவது செலவினம் மூன்றுவதிலுள்ள இலைக் கொம்பர்களைப் பசளையாக நிலத்தில் தாழ்ப்பதற்குரிய கூலி. அதில் விதையென்றிருப்பது இதை அல்லது இதனை என்று மாற்றப்பட வேண்டும்.

இச் செலவினங்கள் கூடிக்கொண்டு போவதால் வெங்காயச் செய்கையைக் குறைக்க வேண்டி நேரிடும் என்பதேயன்றி குறைக்கவேண்டுமென்பது என் அபிப்பிராயமல்ல,

செ. செந்தில்நாதன்
புன்னாலைக்கட்டுவன்.

சமயக்கல்வி மாணவருக்கு அவசியம்

யாழ்ப்பாணம், புதன்

'மனிதர்களாகிய நாங்கள் நல்லறிவைப் பெற்று தீவினைகளை அகற்றி இறைவனை அடையும் வழியைப் பின்பற்றி நடந்து வரவேண்டும்"

வண்ணை நாவலர் வித்தியாசாலையில் நடைபெற்ற திரு ஞானசம்பந்தர் குருபூசை விழாவில் சொற்பொழிவாற்றிய திரு. த. குமாரசுவாமிப் புலவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

வேதநெறி தழைத்தோங்க, மிகுசைவத்துறை விளங்க, பூதபரம்பரை வளர்க என்ற இலட்சியங்களை ஞானசம்பந்தர் நமக்குக் காட்டிச் சென்றார். தாம் பெற்ற அறிவை மற்றவர்களும் பெறச் செய்து நல்வழிப்படுத்தும் மார்க்கத்[illegible] [illegible]யுள்ளார்கள். சைவ நெறியினை உலகில் தழைத்தோங்கச் செய்த பெருமை ஞானசம்பந்தருக்கே உரியதாகும்.

ஆலய பரிபாலன சபைக் கூட்டம்

ரத்தோட்டை, புதன்

ரத்தோட்டை ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலய பரிபாலன சபையின் வருடாந்தக்கூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணியளவில் ஆலய மண்டபத்தில் திரு. வே சபாபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. கூட்ட அறிக்கை, கணக்கறிக்கை என்பவை வாசிக்கப்பட்டு சபையோரால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டபின் கோயில் திருப்பணியைத் தொடர்ந்து செய்யவேண்டுமென்று தலைவர் கேட்டுக் கொண்டார்.

இதன் பின் புதியசபைத்தெரிவு நடைபெற்றது.

தலைவர்:- திரு. வே. சபாபதிப்பிள்ளை, உபதலைவர்:- திரு பொ. பத்மநாதன், செயலாளர்:- திரு து. கிருஷ்ணசாமி, உதவிச்செயலாளர்:- திரு. மா. மகாதேவா, தனாதிகாரி:- திரு. பொ. சின்னையா.

10 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

மாணவர் முன்னேற்றம்

கொள்லாந்தை, புதன்

"மலையக மாணவ சமுதாயம் இன்று கல்வி ஈரைச்சாரத்தில் வெகுவாக முன்னேறிக்கொண்டுவருகிறது. பத்தாண்டுகளுக்கு முன்னிருந்த அறியாமை நிலை நீங்கி விழிப்புணர்ச்சி பெற்றுவிட்ட மாணசமுதாயம் என்றென்றும் முன்னேற்றப் பாதையிலேயே அடி எடுத்து வைக்கவேண்டும்" என கொள்லாந்தை பாரதி கல்லூரி அதிபர் திரு எஸ். ஜெகநாதன் பாரதி மாணவ மன்ற உத்தியோகஸ்தர் தெரிவுக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் மலையகம் முன்னேற வேண்டுமானால் கல்வி அறிவு எலோரிடமும் பரவ வேண்டும் என்றார்.

நாடும் நடப்பும்

நெடுந்தீவில் புதிய சகாப்தம் ஆரம்பித்திருக்கிறது. அந்தத் தீவு மக்கள் முதல் தடவையாக அங்கு பஸ் ஓடுவதைப் பார்க்கிறார்கள். நெடுந்தீவு அழகான தீவு. உல்லாசப் பிரயாணிகளுக்கு உகந்த இடம். பஸ் சேவையும் மோட்டார் படகுச் சேவையும் சீராக வந்துவிட்டால் அரசாங்கம் வேண்டாமென்றாலும் உல்லாசப் பிரயாணிகள் தாமாக விரும்பிச் செல்வார்கள் அந்த நல்ல காலம் வருமென்றே எதிர்பார்ப்போம்.

ஃ ஃ ஃ

நெடுந்தீவுக்கு ஒரு மன்னர் இருந்தார் தெரியுமா? ஒருநாள் மன்னர்தான். அவருக்கு அங்கு முடி சூட்டியதுதான் இங்கு தமிழ் பேசும் மக்களுக்கு வந்த வினை. அந்த ஒருநாள் ராஜா இப்பொழுது இங்கிலாந்தில் இருக்கிறார். அவர் யார் என்று தெரிகிறதா? அவர் தான் சேர் ஜோன்!

ஃ ஃ ஃ

நெடுந்தீவில் புகழ்பெற்ற அரேபியவம்சக் குதிரைகள் இருக்கின்றன, குதிரைகளைக் கழுதைகள் என்று ஒருசமயம் டாக்டர் தகநாயக்காவும், ஆர். ஜி. சேனநாயக்காவும் பார்லிமெண்டில் ஒருசந்தர்ப்பத்தில் குறிப்பிட்டனர். சாதுவான வி. ஏ. கந்தையா (அப்போதைய தீவுப்பகுதி எம். பி) துள்ளியெழுந்து "நெடுந்தீவுக்கு வாருங்கள், வந்து பாருங்கள். அங்கு குதிரைகளா கழுதைகளா இருக்கின்றனவென்று" என்று சவால் விட்டார்.

ஃ ஃ ஃ

இன்று அரசாங்கப் பார்லிமெண்டரிக் குழுக் கூட்டம் நடைபெறுகிறது. அந்தக் கூட்டத்தில் தமிழரசுக்கட்சி எம் பிக்களுக்கும் தமிழ்க்காங்கிரஸ் எம் பிக்களுக்குமிடையில் சமீபத்தில் யாழ்ப்பாணத்துக்கு மந்திரிகள் விஜயம்செய்தது சம்பந்தமாக 'மோதல்' ஏற்படலாமென்று நேற்று முன்தினம் வெளியான மாலை ஆங்கிலத் தினசரிப்பத்திரிகையொன்றில் முதல் பக்கத்தில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது. இதைப் பார்த்த பலரும் வேதனையடைந்திருப்பர். தமிழரசுக்கட்சி எம் பி ஒருவரிடம் இதைப்பற்றி விசாரித்தேன்.

"எங்களுக்குள் என்ன இருந்தாலும் மற்றவர்கள் முன்னிலையில் தலைகுனியக்கூடிய முறையில் நடந்துகொள்ள மாட்டோம். எங்களுக்குள் கருத்துவேற்றுமை கொள்கை வேறுபாடுகள் இருக்கலாம். மற்றவர்கள்முன்னிலையில் நாங்கள் மோதுப்படவும் அவர்கள் எங்களுக்குள் சமரசம் ஏற்படுத்தவும் நாங்கள் இடம் கொடுக்கமாட்டோம்" என்று அவர் சொன்னார், இந்தப் பதில் மனதுக்கு ஆறுதலாக இருந்தது, உங்களுக்கும் நிம்மதியளிக்கும் என்பதற்காகவே இதை இங்கு குறிப்பிட்டேன்.

—'ஊர் சுற்றி'

வாடகைக்கு இல்லை

கொழும்பு, புதன்

இ. போ. ச. இனிமேல் பஸ் வண்டிகளை ஒரு தனிப்பட்ட அரசியல் கட்சிக்கும் வாடகைக்கும் விடுவதில்லை எனத் தீர்மானித்துள்ளது. மே தினத்தன்று அநேக பஸ்கள் சேதப்படுத்தப்பட்டதன் காரணமாகவே இ. போ. ச. நிர்வாகிகள் இவ்வாறு முடிவு செய்துள்ளனர், சேதமடைந்த பஸ்களை இன்று பார்வையிட்ட தேசிய மந்திரி திரு. வி. ஏ. சுகததாசா பஸ்கள் மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளதென்று அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்ச் எல்லையில் பாகிஸ்தான் மேலும் படைகளை குவிக்கிறது

கிழக்கு பாகிஸ்தான் எல்லையில் இரட்டை அணிபாதுகாப்பு

புதுடில்லி, மே19

சிந்து-கட்ச் எல்லையில் பாகிஸ்தான் மேலும் தனது படைகளைக் குவித்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் கட்ச் எல்லைப் பிரச்னை பற்றி பிரிட்டன் தெரிவித்திருக்கும் யோசனை நெருக்கடியான கட்டத்தில் இருப்பதாக கருதப்படுகிறது. ஆனால், பிரிட்டிஷ் சாம்ராஜ்ய உறவு மந்திரி திரு பொட்டம்லி காமன்ஸ் சபையில் விடுத்த அறிக்கையொன்றில் கட்ச் சம்பந்தமான பிரிட்டிஷ் யோசனை வெற்றி பெறும் என நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

அதேசமயம் கிழக்கு பாகிஸ்தான் எல்லையில் பாகிஸ்தான் இரட்டை வரிசையில் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருப்பதாயும், ரஸ்தாக்களும், பாலங்களும் அமைத்திருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

பிரிட்டிஷ் சாம்ராஜ்ய மந்திரி திரு பொட்டம்லி நேற்று விடுத்த அறிக்கையில் பிரிட்டிஷ் யோசனை கட்ச் பகுதியை மட்டும் பொறுத்த ஒரு சிபார்சே தவிர இதர இந்திய-பாகிஸ்தான் எல்லைப் பிரச்னைகளைப் பொறுத்ததல்ல எனக் குறிப்பிட்டார்.

பிரிட்டனின் சிபார்சுகள் பற்றி இந்தியா அவ்வப்போது உடனடியாகப் பதிலனுப்பி வருகிறதென்றும் ஆக்க முறையான போக்கை அது கடைப்பிடித்து வருகிறதென்றும் ஆனால் பாகிஸ்தான் தனது நிலையை தாமதமாகவும், மாற்றியும் வருகிறதென்றும் வெளி விவகார அதிகாரி ஒருவர் கூறினர்.

பிரிட்டன் மட்டுமே கட்ச் சம்பந்தமாக இப்போது யோசனை தெரிவித்து வருகிறதென்றும். பாகிஸ்தான் இதில் எந்த யோசனையை ஏற்றுக்கொண்டிருக்கிற தென்று இந்தியாவுக்குத் தெரியாது என்றும் அவர் மேலும் கூறினர்.

கடந்த திங்கட்கிழமை சாம் பகுதியிலுள்ள இந்திய கிராமத்திற்குள் பாகிஸ்தான் துருப்புக்கள் அத்துமீறிப் பிரவேசித்து சிவிலியன்கள் மீது சுட்டனர் என்றும், இதன் விளைவாக இருவர் கொல்லப்பட்டனர் என்றும் மேலும் அறிவிக்கப்படுகிறது. உடன் இந்தியத் துருப்புக்கள் அங்கு சென்று அவர்களை விரட்டியடித்தனர், ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் போட்டுவிட்டு ஓடினர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

திரிபுரா எல்லையிலும் பாகிஸ்தானியர் 2 மணி நேரம் சுட்டனராம்.

கட்ச் எல்லையில் ஏற்பட்ட சேதம்: இந்திய அரசாங்க அறிவிப்பு

புதுடில்லி, மே 19

கட்ச் சண்டையில் இந்தியப் பொலிசாருக்கும், துருப்புக்களுக்கும் ஏற்பட்ட சேதம் பற்றி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதன்படி பொலிசார் கொல்லப்பட்டனர், 10 பொலிசாருக்குக் காயம் 20 பொலிசாரைக் காணவில்லை, 7 ராணுவத்தினர் கொல்லப்பட்டனர் 31 ராணுவத்தினருக்குக் காயம். 17 ராணுவத்தினரை காணவில்லை.

ராணுவ அதிகாரிகள் எவரும் கொல்லப்படவில்லை. ஆனால் 8 அதிகாரிகளுக்குக் காயம் ஏற்பட்டது. ஒரு அதிகாரியைக் காணவில்லை. பாகிஸ்தான் தரப்பில் 800க்கதிகமானோருக்குச் சேதம் ஏற்பட்டதென்றும், 84 சடலங்களை அவர்கள் போட்டுவிட்டு ஓடினர் என்றும் மேலும் அறிவிக்கப்பட்டது. இவர்கள் ராணுவ மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டனர்.

பியர்பேட்டில் 140 பாகிஸ்தானியர் கொல்லப்பட்டனர். 6 அமெரிக்க டாங்கிகள் அழிக்கப்பட்டன.

வடவியட்னாமில் அமெரிக்க குண்டுவீச்சு மீண்டும் ஆரம்பம்

பெட்ரோல் கிடங்கு நாசம்

சைகோன், மே 19

5 நாள் ஓய்வுக்குப் பின் அமெரிக்க ஜெட்விமானங்கள் வடவியட்னாமில் நேற்று தாக்குதலை ஆரம்பித்தன. அதேசமயம் தெற்கு வியட்னாமில் வியட்காங் இலக்குகள் மீது 150க்கு மேலான தாக்குதல்களையும் அவை நடத்தின.

குண்டுவீச்சு நிறுத்தப்பட்ட இடைக்காலத்தில் சமாதானப் பேச்சுக்காக முயற்சி செய்யப்பட்டபோதிலும் வடவியட்னாம் இதற்கு ஒத்துவரவில்லை என வாஷிங்டனில் அறிவிக்கப்பட்டது. வடவியட்னாமில் குண்டுவீச்சு இருக்கும்வரை சமாதானப் பேச்சுக்கு சாத்தியம் இருக்க முடியாது என கம்போடிய இளவரசர் சிகானுக் அறிவித்திருக்கிறார்.

நேற்றைய அமெரிக்க தாக்குதலில் வடவியட்னாமிலுள்ள பெட்ரோலிய டிப்போ ஒன்றுக்கு பெருஞ்சேதம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

சலவைக்கல்லில் நேரு சிலை

விஜயநகர், மே 19

சலவைக்கல்லினால் ஆன திரு நேருவின் உருவச்சிலை நேற்று இங்குதிறந்துவைக்கப்பட்டது.

ஆதாரமற்றது

புதுடில்லி, மே 19

காஷ்மீர் பிரதமர் திரு சாதிக்கின் வாசஸ்தலத்துக்கு அருகே ஒரு வெடிகுண்டு வெடித்ததாகவும் இதைத்தொடர்ந்து அவர் மற்றோர் பத்திரமான வாசஸ்தலத்துக்கு உடன்வெளியேறினர் எனவும் பாகிஸ்தான் ரேடியோ வெளியிட்ட செய்தி ஆதாரமற்றது என்றும் பொய்யானது எனவும் இந்திய அதிகாரிகள் அறிவித்துள்ளனர்

இஸ்ரேல்

அரபு நாடுகளுடன் சமரச முயற்சி

டெல் அவிவ், மே 19

ஜோர்டான், சிரியா, லெபனன், எகிப்து ஆகிய நான்கு அரபு நாடுகளுடனும் ஒரு சமரசத்தீர்வுக்கு [illegible] தாக இஸ்ரேல் [illegible] எஸ்குவல் அறிவித்திருக்கிறார்.

உபஜனாதிபதி மத்திய கிழக்குபயணம்

பம்பாய், மே 19

இந்திய உப ஜனாதிபதி டாக்டர் ஸகிர் ஹுஸெய்ன் இன்று இங்கிருந்து குவாய்த் புறப்பட்டார். சவூதி அரேபியா, துருக்கி, ஜோர்டான், சிரியா ஆகிய நாடுகளுக்கும், ஜெருசலம், பெத்லஹேம், மக்கா, மதீனா ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்துவிட்டு அடுத்தமாதம் 12-ம் திகதி அவர் டில்லி திரும்புவார்.

ஒழுங்கீன குற்றம் நிரூபிக்கப்படவில்லை

சிட்னி, மே 19

நியூசவுத் வேல்ஸின் முன்னாள் சபாநாயகரான திரு. ஜ்ரசெட்டிஸ் மாஹர் மீது சாட்டப்பட்ட ஒழுங்கீன குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டபோது சபையில் பலத்த கரகோஷம் எழுந்தது.

கடந்த நவம்பர் 17-ம் திகதி முன்னாள் டைப்பிஸ்டான மிஸ் எலிஸபெத் ஹெப்பர்ட் என்ற பெண்ணுக்கெதிரே பார்லிமெண்ட் கட்டடத்தில் ஒழுங்கீனமான நிலையில் காணப்பட்டதாக அவர்மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

தனது காரியாலயத்தில் ஒரு பேட்டியின்போது, மிஸ் ஹெப்பருக்கு பானம்கொடுத்ததாகவும், அவளைத் தொட்டதாகவும், ஆபாசமான வார்த்தைகளில் பேசிதாயும், தனது கால்சட்டை பொத்தான்களைக் கழற்றிக்கொண்டு நின்றதாயும் குற்றம்சாட்டப்பட்டிருந்தது"

தான் ஒருபோதும் இப்படிச் செய்யவில்லை என அவர் விசாரணையின் போது அறிவித்தார்.

டாஷ்கண்டில் சாஸ்திரி

டாஷ்கண்ட், மே 19

இந்தியப் பிரதமர் சாஸ்திரி நேற்று கீவ்நகரிலிருந்து உஸ்பெக்கிஸ்தான் தலைநகர் டாஷ்கண்ட் வந்து சேர்ந்தார். இன்றிரவு அவர் இங்கிருந்து டில்லி புறப்படுவார். உக்ரைனில் சென்ற யுத்தத்தின் போது 65 லட்சம் மக்கள் மாண்ட நினைவுச் சின்னத்தில் நேற்று அவர் மலர்வளையம் ஒன்றை வைத்தார்.

கி. பாக். தேர்தல்

கராச்சி, மே 19

கிழக்கு பாகிஸ்தான் சட்டசபைத் தேர்தலில் ஆளும் கட்சியான முஸ்லிம் லீக்குக்கு பெரும்பான்மை பலம் கிடைக்கவில்லை. லீக்குக்கு 70 ஸ்தானங்களும், சுயேச்சை வாதிகளுக்கு 59 ஸ்தானங்களும் கிடைத்திருக்கின்றன.

ஹோசிமின் பிறந்ததினம்

ஹானோய், மே 19

வடவியட்னாம் தலைவர் டாக்டர் ஹோசிமின்னின் பிறந்ததினத்தை முன்னிட்டு இந்திய ஜனாதிபதி ரதாகிருஷ்ணனும், பிரதமர் சாஸ்திரியும் அவருக்கு வாழ்த்துக்களை அனுப்பியிருக்கின்றனர்.

திருப்பதிக்கு மின்சார ஏணி

சென்னை, மே 19

திருப்பதியில் மலை ஏறுவதற்கு மின்சாரப்படி அமைக்கும் [illegible] மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

சீனுவின் ஊடுருவல் தளம் ஹைனன் தீவு

புதுடில்லி, மே 19

தென்கிழக்காசிய நாடுகளிலும், இதரநாடுகளிலும் ஊடுருவல்செய்ய ஹைனன் தீவை ஒரு இரகசியத்தளமாக கம்யூனிஸ்ட்சீனு உபயோகித்து வருகிறதென இந்திய அரசாங்க பிரசுரம் ஒன்று கூறுகிறது.

வியட்னாம் கரைக்கப்பால், டொன்கின்குடாவை எதிர் நோக்கியிருக்கும் இத்தீவில் நம்பிக்கையான வெளிநாட்டு சீனர்களுக்கும், மற்றவர்களுக்கும் சதிநடவடிக்கைகளில் பயிற்சியளிக்கப்பட்டு வருவதாய் அது கூறுகிறது. கொரில்லா போர்முறை, இதர கானகச்சண்டைகள் ஆகியவற்றை இப்பயிற்சிகள்கொண்டிருக்கின்றன

"சீனத்தலைவர்கள், தங்கள் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு முன்பே ஹைனன் தீவின் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்தனர். ஆட்சியைக் கைபற்றியபின் அவர்கள் இத்தீவின் அபிவிருத்தியில் தீவிர கவனம்செலுத்த ஆரம்பித்தார்கள். தங்களுக்கு விசுவாசமானவர்கள் மட்டுமே இங்கு வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டார்கள். டொன்கின் குடா நெருக்கடியின்போது இத்தீவை மிக நவீன கேந்திரத் தளமாக்கும் முயற்சியில் சீனத் தலைவர்கள் ஈடுபட்டார்கள்" என்றும் அது கூறுகிறது.

"வியட்னாமிலும், இதர அண்டை நாடுகளிலும் சமீபத்தில் ஏற்பட்ட அபிவிருத்திகளும், தாய்லந்து தங்கள் அடுத்த இலக்கு என சென்றமாதம் சீனுவில் அறிவிக்கப்பட்டதும் இதை நிரூபிக்கின்றன. இத்தீவிலிருந்து ஆசியாவில் தூரத்தில்உள்ள நாடுகளுக்கும் ஒருமணிநேரத்தில் ஒரு ஜெட்விமானம் போகமுடியும். சிறிதுநேர முன்னறிவித்தலில் அங்கிருந்து பாய்ந்து செல்லும்முறையில் ராணுவ ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன" என்றும் மேலும் கூறப்பட்டிருக்கிறது.

"ஹைனன் தீவு சீனுவுக்குமிக முக்கியமான விமானத்தளமும் கடல்தளமுமாகும். விமானப் படைப் பயிற்சி நிலையம் ஒன்றும், சீனுவின் தென்பகுதி கடற்படையும் இங்கு இருக்கின்றன. தலைநகர் ஹைகோவில் விரிவான முறையில் பலரஸ்தாக்கள் போடப்பட்டுள்ளன" என்றும் அது மேலும் கூறுகிறது.

அப்துல்லா கைதுபற்றி சூ-வுக்கு தந்தி

கராச்சி, மே 19

காஷ்மீரில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துமாறு இந்தியாவை வற்புறுத்தும்படி ஐக்கிய அரபுக் குடியரசு, அல்ஜீரியா, சவூதி அரேபியா ஆகிய நாடுகளுக்கு அஸாத் காஷ்மீர் மக்கள் விண்ணப்பித்துக்கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

சீனப் பிரதமர் சூ-என்-லாய்க்கு அவர் அனுப்பியுள்ள தந்தியில் ஷேக் அப்துல்லாவை இந்தியா மீண்டும் கைது செய்தது குறித்துக்கண்டித்திருக்கிறது.

பாகிஸ்தான் ஆட்சேபம்

கராச்சி, மே 19

பாகிஸ்தானிலுள்ள சீக்கிய யாத்திரிகர்கள், அவர்களின் புனித க்ஷேத்திரமான குருத்துவாரம் வருவதற்கு இந்தியா அனுமதி மறுத்திருப்பதாயும், இதுபற்றி பாகிஸ்தான் தனது ஆட்சேபத்தைத் தெரிவித்துக் கொண்டிருப்பதாயும் கராச்சி ரேடியோ அறிவித்தது.

பர்மா உதவி

ரங்கூன், மே 19

பாகிஸ்தான் புயல் நிவாரணத்திற்கு பர்மா 200 டன் அரிசியை வழங்கியிருக்கிறது.

"சமாதானமே என் குறிக்கோள்" —அயூப்

கராச்சி, மே 19

சமாதானமே பாகிஸ்தானின் குறிக்கோள் என்றும், இந்தியாவுடன் யுத்தத்தைத் தாம் விரும்பவில்லை என்றும் பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கான் கூறியிருக்கிறார். இருநாடுகளும் பரஸ்பரம் விட்டுக்கொடுத்து பிரச்னைகளைத் தீர்க்க வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினர்.

நேருவுக்கு ஞாபகச்சின்னங்கள்

புதுடில்லி, மே 19

நேருவுக்கு தகுந்த ஞாபகச்சின்னம் ஒன்றை அமைக்கும் பொருட்டு ரூ. 75 லட்சம் நிதி திரட்ட பஞ்சாப் அரசாங்கம் முன்வந்திருக்கிறது. நேருவின் பிறந்த தினமான நவம்பர் 14-ந் திகதி இது திறந்து வைக்கப்படும்.

ஆந்திரபிரதேசம் ரூ 1கோடி செலவில் நேருவுக்கு ஞாயகச் சின்னம் அமைக்கும்.

சைப்ரஸுக்கு ரஷ்யராக்கெட்

நிக்கோஸியா, மே 19

சைப்பிரஸுக்கு ரஷ்யா விமான எதிர்ப்பு ராக்கெட்டுகளை வழங்கியிருப்பதாய் அந்நாட்டின் பாதுகாப்பு மந்திரி ஊர்ஜிதம்செய்தார்.

12,000 பேர் மாண்டனர்

கராச்சி, மே 19

பாகிஸ்தான் புயலில் 5531 பேர் மாண்டதாக உத்தியோகபூர்வமான அறிவிக்கப்பட்டபோதிலும், உண்மையில் மாண்டவர்கள் எண்ணிக்கை 12,000 இருக்குமென உத்தியோகப் பற்றற்ற செய்திகள் கூறுகின்றன.

தென்கொரியாவுக்கு அமெரிக்க உதவி

வாஷிங்டன், மே 19

அமெரிக்கா, தென்கொரிய ஜனாதிபதிகள் விடுத்திருக்கும் கூட்டறிக்கையில், தென்கொரியாவுக்கு அமெரிக்கா ராணுவ உதவியும் 15 கோடி டாலர் நிதி உதவியும் வழங்குமென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியா மறுப்பு

புதுடில்லி, மே 19

கடந்த 11-ம் திகதி முதல் 14-ம் திகதிவரை பாகிஸ்தான் வானப் பிராந்தியத்தில் இந்திய விமானங்கள் மும்முறை அத்து மீறியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை இந்தியா மறுத்திருக்கிறது.

சட்டம் திருத்தப்படும்

சென்னை, மே 19

சோதனை, பறிமுதல் ஆகியன சட்ட விரோதம் என ஹைகோர்ட் தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து திடீர் சோதனை பறிமுதல் ஆகியவற்றுக்கு வழி செய்யும் வகையில் விற்பனை வரிச்சட்டத்தை திருத்த தமிழ்நாடு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

தூதராலயத்தில் குண்டு

ரியோடிஜனிரோ, மே 19

இங்குள்ள அமெரிக்க தூதராலயத்தில் ஒரு குண்டு வெடித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனசமூகநிலைய ஆண்டுவிழா

அனலைதீவு, செவ்

அனலைதீவு மத்திய சனசமூகநிலைய ஆண்டு விழா அண்மையில் நிலையத்தலைவர் திரு வே. குமாரசுவாமி தலைமையில் நடைபெற்றது.

திரு. பொ. விசுவலிங்கம் வட்டு. மேற்கு உறவினர் ஐக்கிய சங்கத்தலைவர் திரு. செ இரத்தினசாமி, திரு. ச. க. காசிலிங்கம், திரு. நா. சரவணமுத்து, திரு ஐ. சிவபாதசுந்தரம் ஆகியோர் கூட்டத்தில் பேசினர்.

பின்வருவோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப் பட்டனர்:- தலைவர்: திரு. ச. க. சிவனடியான். உபதலைவர்: திரு. க கேவிநாதன், காரியதரிசி திரு ச. குமரலிங்கம், தனாதிகாரி திரு. வே. குகதாசன், நிர்வாக உறுப்பினர்களாக மூன்று பேர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

நியமனம்

ஊர்காவற்றுறை, புதன்

அல்லைப்பிட்டி கிராமசபைப் பகுதிக்குப் புதிய சுகாதார பரிசோதகராக திரு. சங்கரையா விசுவலிங்கம் நியமிக்கப் பட்டுள்ளார்.

'வாக்' என்னுமிடத்தில் பல வருடங்களாகக் கடமையாற்றிய இவர் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் அல்லைப்பிட்டியில் கடமையாற்றி வருகிறார்.

பம்பாய் வெங்காயம் விலை குறையும்

கொழும்பு, புதன்

பம்பாய் வெங்காயத்தின் விலை குறையுமென கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபன உத்தியோகத்தர்கள் எதிர் பார்ப்பதாக அறியப்படுகிறது கடந்த வாரம் தலைநகரிலுள்ள வர்த்தகர்கள் பம்பாய்வெங்காயத்தை அந்தல் ஒரு ரூபா வீதம் வாங்கியுள்ளனர்

REGAL – JAFFNA
NOW SHOWING
Maximillian Schell
in
THE
RELUCTANT SAINT

ஞானசம்பந்தர் குருபூசை

யாழ்ப்பாணம், வியா

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் குருபூசை கொழும்புத்துறை கிழக்கு துரையப்பா வித்தியாசாலை மண்டபத்தில் பாடசாலை மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் நேற்றுக் கொண்டாடப்பட்டது.

ஆசிரியர்களும் மாணவ, மாணவிகளும் நாயனாரின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றியும், அவர் சைவத்துக்குச் செய்த தொண்டுகள் குறித்தும் சொற்பொழிவாற்றினர்.

தேர்தல் வழக்கும் ஈ. ஆர். எஸ். ஆரும்

கொழும்பு, புதன்

அசைஸ கமிஷனர் திரு ஈ ஆர் எஸ ஆர் குமாரசுவாமி தாம் தேர்தல் வழக்கு விசாரணைகளில் நீதிபதியாகக் கடமையாற்ற விரும்பவில்லையெனத் தெரிவித்துள்ளார்

தேர்தல் ஆட்சேப மனுக்கள் விசாரணை செய்வதற்கான நீதியரசர்கள் இம்மாத முடிவுக்குள் நியமிக்கப்படவிருப்பதாக அறியப்படுகிறது

வருடாந்த பொதுக்கூட்டம்

வவுனியா, புதன்

வவுனியா அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் வவுனியாக் கச்சேரியில் சங்கத்தலைவர் திரு. எஸ் குசைப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்திற்கு தாய்ச் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளர்கள் திரு அசோகா ஹேரத், திரு. ஹேமந்து முனி ஆகியோர் சமூகமளித்து சங்கத்தின் திட்டவட்டமான திட்டங்கள் பற்றிப் பேசினர்கள்.

நடப்பு வருட உத்தியோகத்தர்கள் விபரம் வருமாறு.- தலைவர் திரு. பி. வி.ஹேரத், உபதலைவர்கள் திருவாளர்கள் தா. பாலரத்தினம், எஸ' சிற்றம்பலம், காரியதரிசி திரு. செ. கணேஷ், பொருளாளர் திரு ரகுநாதபிள்ளை.

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன்) தீவோலி (நுவரேலியா)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி பிற்பகல் 2-30, 6-30, 9-30

★ சிவாஜி கணேசன்
★ எஸ்.எஸ். ராஜேந்திரன்
★ விஜயகுமாரி
மற்றும் பலர் நடித்த
பச்சை விளக்கு

'சமயச்சின்னங்களை அணிய வெட்கமா?'

சண்டிலிப்பாய், புதன்

"ஏனைய மதத்தவர்கள் தமது சமயச்சின்னங்களை அணிவதிற் பெருமைகொள்கிறார்கள். ஆனால் சைவசமயத்தைச்சேர்ந்த நம்மவர்களோ விபூதி அணிய வெட்கப்படுகிறார்கள். பல்லாயிரம்வருடங்களாகப் போதனையாலும் சாதனையாலும் வளர்ந்து காலத்திற்குக்காலம் நல்ல பல வழிகாட்டிகள் தோன்றிச் சீர்படுத்தியது எமது சமயம்" என பண்டிதர் க. மயில்வாகனம் சண்டிருப்பாய் இந்துக்கல்லூரி மாணவப் பேரவை நடத்திய சம்பந்தர் விழாவிற் பேசும்போது குறிப்பிட்டார், விழாவுக்கு செல்வன் இ பரமேஸ்வரன் தலைமைதாங்கினார்.

திரு. மயில்வாகனம் தொடர்ந்துபேசுகையில் குறிப்பிட்டதாவது:-

சங்ககாலத்தை அடுத்த சில நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டில் சமண, பௌத்தமதங்கள் பரவியிருந்தன. சம்பந்தர் தோன்றிச் சைவத்தை வளர்த்தார், திருநீறுபற்றி அவர் பாடிச் சைவசமயச் சின்னங்களைப் பெருமைபடுத்தினார். அவர் பாடல்களை மனம் உருகப்பாடினால் நாம் கடைத்தேறலாம்.

ஆசிரியர் மு. சிவானந்தம் வரவேற்புரைகூறினர் செல்வி சி. சாந்தாதேவி நன்றிதெரிவித்தார்.

அமெரிக்க உதவிபற்றி பேச்சுவார்த்தை

பம்பலப்பிட்டி, புதன்

அமெரிக்க உதவி இலங்கைக்கு மீண்டும் கொடுப்பது பற்றி வஷிங்டனில் இலங்கை ஸ்தானிகா காரியாலய அதிகாரிகளுக்கும் அமெரிக்க ராஜாங்க உத்தியோகத்தர்களுக்கு மிடையே ஆரம்பப் பேச்சுக்கள் தொடங்கி விட்டதாகத் தெரியவருகிறது.

எண்ணைக் கம்பெனிகளுக்கு தேசிய அரசாங்கம் நஷ்டஈடு வழங்குவது பற்றி நடந்து கொண்டமுறையைப் பாராட்டி அமெரிக்க அரசாங்கம் இலங்கைக்கு நன்றி தெரிவித்துள்ளதென்றும் தெரியவருகிறது.

அமெரிக்க உதவி இலங்கைக்கு வழங்குவதுபற்றி இங்கு பேச்சுவார்த்தைகள் நடாத்துவதற்காக ராஜாங்க உத்தியோகத்தர்கள் விரைவில் வருவார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது.

விசாரணைச்சபை மூலம் பரிகாரம் தேடலாம்

பம்பலப்பிட்டி, புதன்

"தேசிய லொத்தர் சபையை மாற்றியமைப்பதில் அங்கேயுள்ள குறைகள் நிவிர்த்தியாகமாட்டாது, ஆகையால் ஒருவிசாரணைச்சபையை நிறுவி அதன் மூலம் அதற்குப் பரிகாரம் தேடுவது சிறந்த முறையாகும்" என்று தேசிய லொத்தர் சபை ச்ரேஷ்ட அதிகாரிகளும், சுவீப் டிக்கட் ஏஜெண்டுகளும் நிதியந்திரி திரு. யு பி வன்னியநாயக்காவுக்கு ஆலோசனை கூறியுள்ளார்கள்.

கூட்டரசாங்கம் வருவதற்கு முன்னர் தேசிய லொத்தர் சபையில் குறைந்த அளவில் உத்தியோகத்தர்கள் இருந்ததுடன் அநேக டிக்கட்டுகளும் விற்றுப் பெருந்தொகையான பரிசில்களும் கொடுத்தார்களென்று மேலும் மந்திரிக்கு அவர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்கள்

பால் தட்டுப்பாடு

வவுனியா, புதன்

"நமது நாட்டில் இன்று பால் தட்டுப்பாடு மிகவும் அதிகரித்துவருகிறது. இப்படியான நிலையில் நீங்கள் அதிக விலைக்குப் பால் வாங்குவதால் நாட்டில் ஒரு போதும் நமது தேவையைப் பூர்த்திசெய்ய முடியாது" என்று ... இளைஞர் விவசாயக்கழகத்தின் கூட்டத்தில் பேசுகையில் தலைவர் திரு. கண்ணையா கூறினர்.

"மடியிலிருந்து எடுத்த கத்தி பள, பள என்றுமினுங்கியது"

மந்துவில் இரட்டைக் கொலை வழக்கில் கொலையுண்டவரின் தந்தை சாட்சியம்

சாவகச்சேரி, புதன்

"இந்த வருடம் சித்திரை மாதம் 19-ம் திகதி மந்துவிலில் இறந்த சின்னம்மா என்பவரின் செத்தவீட்டிற்குப் போயிருந்தேன். அன்று மத்தியானம் இரண்டரைமணிபோல் பிரேதம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. நானும் பிரேதத்துடன் சுடலைக்குச் சென்றேன். மயானத்தில்பிரேதம் தகனம் செய்ய விறகு அடுக்கினேன். என்னோடுகூட எதிரிகளும், கொலையுண்டவர்களும் காயமடைந்த கிட்டினரும் செல்லப்பா, ரத்தினம் ஆகியோரும் விறகு அடுக்கிக் கொண்டு நின்றனர். அந்தச் சமயம் நாகமுத்துவுக்கும் கிட்டினருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து கிட்டினரை நெருங்கி நாகமுத்து போக கிட்டினர் பின்னோக்கிச் சென்றார். கிட்டினர் மடத்தடிக்குப் போனதும் முதலாம் எதிரி மடியில் இருந்த ஒரு கத்தியைஎடுத்து கிட்டினரின் தோளில் குத்தினார். குத்துப்பட்டவுடன் கிட்டினர் மடத்திலுள் சென்றார். நாகமுத்துவும் அவரைத் தொடர்ந்து உடனே சென்றார். அப்பொழுது சுப்பிரமணியம் மடத்தின் வாசலுக்கு வந்து 'ஏன் குத்துப்படுகிறீர்கள்' என்று கேட்டார் உடனே நாகமுத்து "நீ ஏன் கேட்கிறாய்" என்று கேட்டுக்கொண்டு கிட்டினரைக் குத்திய அதே கத்தியால் சுப்பிரமணியத்தின் நெஞ்சில் குத்தினார் குத்துப் பட்டவுடன் சுப்பிரமணியம் சரிந்தார். அவர் சரியும் பொழுது 2-ம் எதிரி நவரத்தினம் ஒருகோடரியால் தலையில் வெட்டினார். உடனே அவர் நிலத்தில் விழுந்தார். விழுந்து புரளும்பொழுது 1-ம் எதிரி மீண்டும் கத்தியால் முதுகில் குத்தினார், நான் சுப்பிரமணியத்தின் அருகில் சென்று அழுது கொண்டிருந்தேன் பின்னர் இருஎதிரிகளும் அங்கு நின்ற சித்திரனை துரத்திக் கொண்டு போனார்கள். அவர்கள் ஏன் குத்துப் பட்டார்கள் என்று எனக்குத் தெரியாது. கொலையுண்ட சுப்பிரமணியம் எனதுமகன்."

இவ்வாறு மந்துவில் இரட்டைக்கொலை வழக்கு நேற்றுக் காலை சாவகச்சேரி மஜிஸ்டிரேட் கோர்ட்டில் நீதிபதி திரு. பி. ஜெபர்ட்சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபொழுது சாட்சியமளித்த கொலையுண்டவர்களுள் ஒருவரான சுப்பிரமணியத்தின் தந்தை கணபதி கூறினார்.

இவ்வழக்கில் மந்துவிலில் கே. சுப்பிரமணியம், கே. சித்திரன் இருவரையும் கொலை செய்ததாகவும் கே. கிட்டினரைக் கொலை செய்ய முயற்சித்ததாகவும் கதிரன் நாகமுத்து, சின்னையா நவரத்தினம் இருவர் மீதும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் திருவாளர்கள் வி. செல்லத்தம்பி, எஸ். பாலகிருஷ்ணன் ஆகியோரின் அனுசரணையுடன் வழக்கறிஞர் திரு கே. வி. என. சண்முகநாதன் ஆஜரானார்.

சாட்சியமளித்த கணபதியை திரு. சண்முகநாதன் குறுக்கு விசாரணை செய்தார்.

வழ- பொலிசாருக்கு நீர் அளித்த வாக்குமூலம் எங்கு பதியப்பட்டது?-சுடலையில்.

வழ- சுப்பிரமணியத்திற்கும் கிட்டினருக்கும் குத்துவிழும் பொழுது சுடலையில் எத்தனை பேர் நின்றனர்?-பதினைந்து இருபதுபேர்,

வழ- முதலாம் எதிரியை யாரும் குத்தியதை நீர் கண்டீரா?-காணவில்லை.

வழ- கிட்டினரின் கையில் கத்தி இருந்ததா?-இல்லை, நான் காணவில்லை.

வழ- சித்திரனை இரு எதிரிகளும் துரத்திக் கொண்டு சென்றபொழுது எதிரிகளின் கையில் ஏதாவது ஆயுதம் இருந்ததா?-சித்திரனைத் துரத்துக் கொண்டு சென்ற எதிரிகளின் பின்னால் வேறுசிலரும் ஓடியமையினால் எதிரிகளின் கையின் ஆயுதம் இருந்ததை நான் காணவில்லை.

வழ- பொலிசார் வரும் வரை நீர் அங்கு இருந்தீரா?- ஆம்.

வழ- குத்தியசமயம் பிரேதத்திற்குக் கொள்ளி வைக்கப் பட்டதா?-இல்லை,

வழ-பின்னர் எரிந்துகொண்டிருந்த பிரேதத்திற்கு யார் கொள்ளி வைத்தார்களென்று தெரியுமா?-தெரியாது.

வழ- முதலாம் எதிரி கத்தியை எங்கிருந்து எடுத்தார்? —தனது மடியிலிருந்து எடுத்தார். அந்த கிறிஸ்கத்தியின் இருபக்கங்களும் கூராக இருந்தன. கத்தி பளபள என்று மின்னியது.

வழ- 2-ம் எதிரி சுப்பிரமணியத்தின் தலையில் வெட்டிய கோடரிக்கு என்ன நடந்தது? — எனக்குத் தெரியாது.

மேல்விசாரணை அடுத்த வாரம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சிறுபான்மைத் தமிழரது பிரச்னைகளைத் தீர்க்கமுயற்சி

உடுப்பிட்டி எம். பி. விளக்கம்

பருத்தித்துறை, செவ்

"சிறுபான்மைத் தமிழ் மக்களது பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதில் நானும் எனது கட்சியும் மிகவும் தீவிரமான முயற்சிகளை எடுக்கத் தீர்மானித்துள்ளோம். காணி, வீடு தொழில் இல்லாப் பிரச்னைகள் உடனடியாகத் தீர்க்கப்படவேண்டும் என்பதை உணர்ந்தே வீடமைப்பு தொழில் அமைச்சரை இங்கு அழைத்து வந்தோம். இங்குள்ள ஓலைக் குடிசைகட்குப் பதிலாக நல்ல வீடுகள் கிடைக்க அவர் வழி செய்வதுடன் ஆரம்ப நடவடிக்கையாக குடியிருக்கும் காணியை உரிமையாக்க முயற்சிகள் மேற்கொள்வதாக உறுதியளித்துள்ளார்"

இவ்வாறு உடுப்பிட்டி எம் பி. திரு மு. சிவசிதம்பரம் வியாபாரிமூலை இளைஞர் முன்னேற்றச் சமுதாயத்தினரால் தமக்களிக்கப்பட்ட வரவேற்புபசாரத்தில்பேசுகையில் கூறினார்.

திரு. த. அப்புக்குட்டி தலைமையில் நடைபெற்ற இவ்வரவேற்பில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது.

சிறுபான்மைத் தமிழர் மத்தியில் இருக்கும் வறுமை வாலிபர்கட்கு வேலையின்மை ஆகியவைகளை நீக்க என்னால் இயன்றதைச் செய்வேன். தேவைகளை ஒன்றுசேர்ந்து சமர்ப்பித்தால் நிறைவேற்றுவது சுலபமாகும்".

திரு கி. குண்டுமணி, ஆசிரியர்கள் ஏ. கார்த்திகேசு, மணிசுந்தரம் ஆகியோரும் பேசியதைத் தொடர்ந்து செல்வி சி இரத்தினம் வாழ்த்துப் பாக்களை பாடி வழங்கினார். திரு வ. இந்திரன மன்றச் சார்பில் மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தார்.

க. தங்கராசா நன்றி கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மனிதகுலம் ஒன்றுபடுவது மிகவும் முக்கியமானது'

பஹாய் இயக்கத்தூதர் கருத்து

உடுப்பிட்டி, புதன்

"சண்டையையும்சச்சரவையும் ஆரம்பிப்பது மிகவும் சுலபம். ஆனால் சமாதானத்தையும் அன்பு நெறியையும் எல்லோராலும் கடைப்பிடிக்க முடியாது. மனித குலம் ஒற்றுமைப்படவேண்டும். மனிதகுலத்தின் ஒருமைப்பாடு என்பது பஹாயுல்லாவின் பன்னிரண்டு கொள்கைகளில் மிகவும் முக்கியமானது. நான் இலங்கைக்கு விஜயம் செய்த சில நாட்களில் இங்குள்ள மக்களை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அவர்கள் மிகவும் நல்லவர்கள். ஆனால் தேவையற்ற அரசியல் கட்சிகளில் சேர்ந்து ஓளவு சமுதாய அபிவிருத்தி தெரிந்து கொண்டிருக்கிறார்கள், உலகிலேயே ஆளுக்கொரு கொள்கையும் நாட்டிற்கொரு மொழியும் இனத்திற்கொரு மதமுமாக மக்கள் வேறுபட்டுள்ளனர். கடவுள் ஒருவர் என்பதுதான் உண்மை, உண்மைக்கு என்றும் அழிவில்லை. உண்மை எப்பொழுதும் ஒன்றாகத்தான் இருக்கமுடியும். உண்மையைச் சுதந்திரமாக ஆராயப்பழக வேண்டும். அதன் பின்னரே மெய்ஞானம் ஏற்பட வழிபிறக்கும்"

இவ்வாறு வடஇந்தியாவிலிருந்து வந்திருந்த பிரபல புற்றுநோய் வைத்தியரும் பஹாயுல்லா இயக்கத்தூதுவருமான டாக்டர் முஞ்சி, வதிரி, வைரவோடை ஸ்ரீ முருகன்படிப்பக முன்றலில் திரு. தம்பையா தலைமையில் நடைபெற்ற பஹாய் இயக்கக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

இன்றைய விஞ்ஞானிகளின் புதிய கருத்துக்கள் பலவற்றையும் சமுதாய முன்னேற்றத்திற்கான புத்திமதிகளையும் பஹாயுல்லா பல ஆண்டுகளுக்கு முன்பே எடுத்துக் கூறியுள்ளார். உலக வங்கி, உலகசபை முதலிய பொறுப்பு வாய்ந்த ஸ்தாபனங்களை உருவாக்க வேண்டும் என்று அவர் முன்பே கூறியிருக்கிறார். அவரை ஓர் தீர்க்கதரிசி என்றே கூறலாம். உலகமெங்கும் பரந்து கிடக்கும் பஹாய் சகோதரர்கள் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக இருக்க வேண்டும். இந்தியாவிலுள்ள பஹாய் மக்கள் சார்பிலும் தேசிய ஆத்ம ஞானசபைசார்பிலும் இலங்கை மக்களுக்கு குறிப்பாக வதிரி மக்களுக்கு எனது நன்றியையும் அன்பையும் தெரிவிக்கிறேன். உங்களுடைய இந்திய வருகையை மிகவும் ஆவலோடு நான் எதிர்பார்த்திருப்பேன்,"

அமெரிக்க இரசாயனவியல் நிபுணர் திரு. சலோனர் குட் பேசுகையில், சகல மக்களுக்கும் பொதுவான சர்வதேச நீதிமன்றம் உருவாக்கப் படவேண்டும். சகலருக்கும் பொதுவான உலகப் பொது மொழியொன்றும் இனமதபேதமற்ற சமமான கல்வி வசதியும் உருவாக்கப்படவேண்டும். மக்களிடையே போட்டியும் பொறாமையும் தற்பெருமையும் அழிந்து அன்பும், பண்பும் ஆத்மீகநெறியும் ஏற்படவேண்டும், எல்லோரும் எல்லோரையும் பேணவேண்டும். இதுவே பஹாய் இயக்கத்தின் முக்கிய கோட்பாடாகும். அமெரிக்காவிலும் ரஷ்யாவிலும் பேசியா, இந்தியா, மலாயா முதலிய இடங்களிலும் பஹாயின் தொகை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. இலங்கையிலும் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் முஸ்லிம்கள் பலரும் பஹாய் இயக்கத்தை ஆதரிக்கின்றனர். பஹாயுல்லா அவர்களுக்கு என்றும் துணையாக இருப்பார்" என்று அவர் கூறினர்.

யாழ். உதவி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி திரு. கே. சிவப்பிரகாசமும் பேசினர்.

அமெரிக்கரான திரு குட்டிற்கும் வடஇந்திய டாக்டர் முஞ்சிக்கும் வதிரி மக்கள் பனையின் பிரயோசனங்களான நுங்கையும் புழுக்கொடியலையும் கொடுத்து விருந்தளித்தனர்.

வானொலி நிகழ்ச்சிகள்

வியாழன் 20-5-65

கொழும்பு

(செய்திகள்: காலை 7-15 பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00.)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரக்கானம், 1-00 கதம்பஇசை,

மாலை 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 சிறுவர்மலர், 5-45 திரைப்படஇசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45சங்கீதவகுப்பு, 7-00 மதிப்புரை, 7-15 ஜனரஞ்சகம், 7-45 நாடகம்— லண்டன் கந்தையா, 8-30 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்தியஇசை, 9-30 நேயர் விருப்பம், 10-00 விசேட ஒலிப்பதிவுகள்.

தமிழ் மாணவரின் கஷ்டம்

உடுப்பிட்டி, புதன்

கல்விப் பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்திபெறும் தமிழ் மாணவர்கள் தமது மேற்படிப்பைத் தொடர்வதற்குக் கஷ்டப்படுகிறுர்களென்றும் தமிழர்களுக்கென ஒரு பல்கலைக்கழகத்தை அமைப்பது பற்றிய விஷயத்தையும், கொக்குவிலிலுள்ள கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியைச் சிரேஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியாக்குவது பற்றி அரசாங்கம் பாராமுகமாக இருப்பதாலேயே இவ்வித கஷ்டமடையவேண்டியிருப்பதாகவும் உடுப்பிட்டி இளந்தமிழர் இயக்கச் சார்பில் அதன் செயலாளர் திரு. சுவர்ணராசா தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கு அனுப்பியுள்ள மகஜரொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மாணவர்கள் மேற்படிப்பைத் தொடர்வதற்கு அரசாங்கம் இலங்கையில் வசதிசெய்து தரவேண்டும் அல்லது வெளிநாடுகளில் சென்று பயில்வதற்கு இருக்கும் தடைகளை நீக்கவேண்டுமென்றும் இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் இயக்கக் காரியதரிசி தமது மகஜரில் கேட்டுள்ளார்.

தமிழரசுக்கட்சிக் கிளைக் கூட்டம்

யாழ்ப்பாணம், வியா

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வண்ணார்பண்ணைக் கிளையின் புனருத்தாரணக்கூட்டம் அரசடிவீதியிலுள்ள 92ம் இலக்க வீட்டில் திரு. பொ. அமரசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

திரு. அமரசிங்கம் தமது தலைமையுரையில், கட்சிக் கிளைகளும், மற்றும் வாலிப முன்னணிக் கிளைகளும் தனிய அரசியல் நோக்கோடு நிற்காமல் கைத்தொழில் உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்குதல் ஆகியவற்றிலும் கவனம் செலுத்த வேண்டும், ஆரம்பத்தில் ஒவ்வொருவருடைய இல்லங்களிலும் சிறு கைத்தொழில்களை ஆரம்பித்து நடத்தவேண்டும் அப்படியாகச் செல்லுதலுல் கைத்தொழில் முன்னேற்றமடைய முடியுமென்றுர்.

கட்டப்புவருட உத்தியோகத்தர்களாக [illegible] தெரிவுசெய்யப்பட்டனர். [illegible]

ஒப்பந்த நிபந்தனை

பம்பலப்பிட்டி புதன்

எதிர்வரும் மூன்று வருடங்களுக்கு வெளிநாட்டுச் செலாவணி மூலம் எண்ணைக்கம்பெனிகளுக்கு நஷ்டஈடு வழங்கப்படமாட்டாதெனத் தெரிய வருகிறது. தேசிய அரசாங்கத்திற்கும் எண்ணைக்கம்பெனி பிரதிநிதிகளுக்குமிடையில் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தில் இதுவும் ஒரு நிபந்தனையாகும்.

இந்த ஒப்பந்தத்தை தேசிய மந்திரிசபை அங்கீகரித்துள்ளதாகவும் எண்ணைக்கம்பெனிப் பிரதிநிதிகள் ஒப்பந்தத்தைத் தங்கள் ஸ்தாபனங்கள் அங்கீகாரத்திற்காக அனுப்பியுள்ளதாகவும் தெரியவருகிறது.

அமைப்புக் கூட்டம்

யாழ்ப்பாணம், வியாழன்

வண்ணார்பண்ணை நாவலர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் திரு. பரம் தில்லைராஜா தலைமையில் நாவலர் கோட்டத்தில் நடைபெற்றது.

வண்ணார்பண்ணை மத்தியில் வசிக்கும் மக்களுக்கு வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் வாங்குவதற்கு அண்மையில் கூட்டுறவுச் சங்கக் கடை இல்லாத பெருங்குறையை தீர்த்துவைப்பதற்காகவே மேற்படி கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது என்பதனை தலைமையுரையில் தலைவர் எடுத்துக்கூறினர்.

அடுத்த மாதம் 2ம் திகதி சங்கத்தின் திறப்பு விழா நடைபெறும் எனவும் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. இத்திறப்புவிழாவிற்கு கூட்டுறவு ஆணையாளரை அழைப்பது எனவும் முடிவுசெய்யப்பட்டது, கூட்டுறவுப் பரிசோதகர் திரு நடராசா சங்கத்தின் வழிமுறைகளை எடுத்து விளக்கினர்.

ரூபா 350 திருடியவருக்கு 3 மாதச்சிறை

கொஸ்லாந்தை, புதன்

கொஸ்லாந்தை மீரியவத்தை தோட்டத் தொழிலாளியான பெருமாள் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் புகுந்து 350 ரூபா பணத்தை திருடியதாக குற்றஞ்சாட்டப்பட்டு மீரியவத்தை ராமசாமியின் மகன் பெருமாள் என்ற 18 வயது இளைஞன் மீது குற்றஞ்சாட்டப்பட்டு தொடரப்பட்ட வழக்கில் மாவட்ட நீதிபதி எதிரிக்கு மூன்றுமாத சிறைத்தண்டனை விதித்தார்.

இவ் வழக்கில் எதிரி தான் திருடவில்லை என்றுவாதாடிய போதும் குற்றம் நிரூபிக்கப்பட்டது.

பாராட்டுவிழா

வவுனியா, புதன்

வவுனியா கோவிற்புதுக்குளம், ஸ்ரீகணேச அரசினர் தமிழ் கலவன் பாடசாலைத் தலைமையாசிரியர் திரு எஸ். எஸ். பொன்னம்பலம் 33 வருட ஆசிரியசேவையைவின்றும் ஓய்வுபெறவிருப்பதால் அன்னரின் சேவைநலம் பாராட்டு விழா நடைபெற்றது.

மின்சாரம் இல்லை

வவுனியா, புதன்

வவுனியாவில் குருவளிகாரணமாக வீதிகளிலுள்ள மின்சார கம்பங்கள் விழுந்ததாலும் கம்பிகளின் மேல் மரங்கள் விழுந்ததாலும், இதுவரையும் வீதிகள் மின்சாரமின்றி இருட்டாக உள்ளன.

வீதிகள் இருட்டாக இருப்பதால் இரவுநேரங்களில் மக்கள் மிகவும் கஷ்டமடைகின்றனர்.

வர்- மு. மகாலிங்கம், உபதலைவர்கள்- க. விஷ்ணுகாந்தி, சி. இராசதுரை, காரியதரிசி- சுப்பிரமணியம், உபகாரியதரிசி- ந. ஆனந்தவிநாயகன், பொருளதிகாரி- செ. குமாரவேலு, கணக்குப் பரிசோதகர்- முத்துக்குமாரு.

பதினொருபேரைக் கொண்ட [illegible] தெரிவு செய்யப்பட்டது.

புதிய இரட்டைத்தட்டு பஸ்கள்

பம்பலப்பிட்டி, புதன்

இ. போ. சபைக்கு 24 இரட்டைத்தட்டு பஸ்கள் புதிதாக வந்திருக்கின்றன. கடந்த இரண்டு வாரங்களுக்குள்ளும் இது இரண்டாவது முறையாக வந்துள்ள தொகையான இரட்டைத்தட்டு பஸ்களாகும். இந்த பஸ்கள் கப்பலில் இருந்து இறக்குவதற்காக துறைமுகப் பகுதியினர் விசேஷ ஒழுங்குகள் செய்வார்கள் எனத்தெரியவருகிறது.

மாணவர்களிடையே மேகநோய்

பம்பலப்பிட்டி, புதன்

பாடசாலைக்குச் செல்லும் 15, 16 வயதுடைய மாணவர்களுக்கு மேகநோய் இருந்துவருவதாக சுகாதாரப்பகுதியார் தெரிவித்துள்ளனர். கடைசியாக சுகாதாரப்பகுதியினரால் தயாரிக்கப்பட்ட புள்ளி விபரங்களின்படி 12,740 பேர்கள் இலங்கையின் பல ஆஸ்பத்திரிகளிலும் மேகநோய் நிலையங்களிலும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

மேகநோய் எவ்வாறு உண்டாகின்றதென்றும் அதனை எவ்வாறு தடுக்கலாம் என்பது பற்றியும் வானொலி மூலம் பொதுமக்களுக்கு அறிவுபுட்டுவதற்காக சுகாதார, கல்வி பகுதியினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

குடும்பக்கட்டுப்பாடு பிரசாரக் கூட்டம்

வவுனியா, புதன்

"திட்டமிட்ட குடும்ப முறையை ஏற்படுத்துவது ஒரு சௌக்கியச் சேவையாகும். இக்குடும்பக்கட்டுப்பாட்டுச்சபை உலகத்தில் 66 நாடுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் சேவையால் நாட்டில் வருங்காலப் பிள்ளைகள் நல்ல திடகாத்திரமாக வளரமுடியும்" என்று நேற்று மாலை வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற குடும்பக்கட்டுப்பாட்டுப் பிரசாரக் கூட்டத்தில் வவுனியா சுகாதார வைத்தியர் திரு. கணேஸ் மேற்கண்டவாறு கூறினர். இக்கூட்டத்திற்கு வவுனியா அரசாங்க அதிபர் ஆர். எம். வி. செனநாயக்கா தலைமை வகித்தார்.

சம்பந்தர் குருபூசை

சுன்னுகம், புதன்

சுன்னுகம் மயிலணி சைவ வித்தியாசாலையில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் குருபூசை சிறப்பாகத் தில்லையம்பல மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. திருவாளர்கள் மா. குமாரசாமி, எஸ். சோமாஸ்கந்தசர்மா, பண்டிதர் ச. கந்தசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சுழிபுரத்தில்

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனுர் குருபூசை வெகுவிமரிசையாக சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. கல்லூரி மாணவிகளின் இசைக்கச்சேரியுடன் ஆரம்பமாகிய விழாவில் தேவாரப் பண்ணிசைகள் பாடப்பட்டன. சிறப்புச் சொற்பொழிவாளராக முதலியார் செ. சின்னத்தம்பி கலந்துகொண்டார்.

கொக்குவிலில்

திருஞானசம்பந்தர் குருபூசை கொக்குவில் இந்துக்கல்லூரியில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவுக்குப் பிரதம பேச்சாளராக திரு. ஐ. முத்துக்குமாரசாமி கலந்துகொண்டார். மற்றும் இந்து வாலிபர் சங்கத் தலைவரி பண்டிதர் மு. சின்னத்தம்பி, பண்டிதை திருமதி சதாசிவம் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

வரி விளம்பரங்கள்

காணி விற்பனைக்கு

கைலாயபிள்ளையார் கோவிலடியில் 88/5 கோவில் வீதியில் 8 3/4 பரப்பு விற்கப்படும் விசாரிக்க: பொ. கனகம்மா, வைத்தியர் பரிபூரணநாதர், மேல்பார்த்து கைலாயபிள்ளையார் கோவிலடி, நல்லூர். 276

தேவை

மசகிடும் சேவையில் (சேர்விஸ்ஸ்டேஷனில்) வேலைசெய்த அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. கீழ்க்காணும் இடத்திற்கு நேர்முகமாகச் சமூகமளிக்கவும். பரஸ்கோ லூபிரிக்கேஷன் சேர்விஸ, முத்திரைச்சந்தை, நல்லூர். 275

கிளிநொச்சிப் பகுதியில் வேலை செய்வதற்கு ட்றக்டர் திருத்துவதில் அனுபவமும், லைசென்சும் உள்ள ட்றக்டர் சாரதி தேவை. ரூ. 250 கட்டுப்பணம். அனுபவத்திற்கேற்ப ஊதியம் வழங்கப்படும், விண்ணப்பிக்கவும்: விளம்பர இல: 280, ஈழநாடு மேற்பார்த்து. யாழ்ப்பாணம். 280

நல்ல நிலையிலுள்ள ஒரு ஸ்கூட்டர் தேவை, விபரங்களுக்கு சி. நடராஜா யாதம்பை மாதகல். 281

கல்வி

மாணவர்களே! மாணவியர்களே! பலகாலமாக தொழிற்கல்வி அளித்துவந்த வர்த்தக கணக்கியல் கல்லூரி திறமையான ஆசிரியர்களால் நடத்தப்படுகிறது. வகுப்புக்களுக்கு முந்துங்கள் — இடம் சீதாசோடா பாக்டரி முன்னால், 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 277

பி. ஏ. ஜி. ஏ. கியு, ஜி. சி. ஈ (உயர் சாதாரண) தரங்கள் கலை விஞ்ஞானம், தமிழ், ஆங்கில வர்த்தக வகுப்புக்கள், சிங்களம், மத்திய எழுத்து வினைஞர் வகுப்பு, அப்போதிக்கரிப் புகுமுக வகுப்பு ஆசிரிய கலாசாலைப் பிரவேச வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. யாழ். டியூட்டோரியல்கல்லூரி கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர்—யாழ்ப்பாணம். 279

வகுப்புகள்

ஜி. சி. இ. சாதாரணம், சுருக்கெழுத்து, தட்டியல், கணக்கியல் முதலியவற்றிற்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. யூனிட்டெட் இன்ஸ்டிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி, 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 274

சித்திர ஆசிரியர் குறைபாடுகள்

உடுப்பிட்டி, புதன்

சித்திர ஆசிரியர்களின் குறைபாடுகளையும் அநீதிகளையும் கல்விமந்திரிக்கு நேரில் எடுத்துரைப்பதென்று அகில இலங்கைச் சித்திர ஆசிரியர் சங்கத்தின் 2 வது ஆண்டுக்கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

கீழ்கண்ட தீர்மானமும் இக் கூட்டத்தில் நிறைவேறியது. அரசாங்க பாடசாலைகள் சுவீகரிக்கப் பட்ட பாடசாலைகள் என்ற பேதமின்றி மகா வித்தியாலயங்கள் மத்தியமகா வித்தியாலயங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு சித்திர ஆசிரியராவதுநியமனஞ்செய்ய அனுமதியளிக்கவேண்டும்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லஞ்சகுற்றச்சாட்டுதிருத்தமசோதா
ராஜாங்க மந்திரி கொண்டுவருவார்

கொழும்பு, செவ்வாய்
லஞ்ச குற்றச்சாட்டுச் சட்டத்தை திருத்தக் கோரும் ஒரு மசோதாவை ராஜாங்க மந்திரி திரு ஜே. ஆர். ஜெயவர்தன ஜனப்பிரதிநிதிகள் சபைவரும் வியாழக்கிழமை கூடும்போது கொண்டுவரவிருக்கிறார்.
லஞ்சக் குற்றச்சாட்டுச்சட்டத்திலுள்ள சில குறைபாடுகளைப் போக்குமுகமாகவே இத் திருத்த மசோதா கொண்டு வரப்படவிருக்கிறது.
இந்ததிருத்த மசோதா லஞ்சம் வாங்குபவர்கள் மீது அட்டோர்ணி ஜெனரல் மாவட்ட நீதிமன்றங்களில் வழக்குத் தொடர அதிகாரம் அளிக்கும்.

—

கொழும்பு, செவ்வாய்
சென்ற வருடத்தில் இலங்கை காப்புறுதிக் கூட்டுஸ்தாபனம் சுமார் 2 கோடி ரூபா லாபமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எம். பி. க்கு பொய்த்தந்தி அனுப்பியதாக வழக்கு

யாழ்ப்பாணம், புதன்
பதுளை தர்மதூதாக் கல்லூரி அதிபரின் பெயருடன் உடுப்பிட்டி எம். பி. திரு எம். சிவசிதம்பரத்துக்கு பொய்யான தந்திச்செய்தியொன்றை 1962-ம் ஆண்டு நவம்பர் 23-ம் திகதி அனுப்பியதாக கன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆசிரியர் திரு. ஏ கல்யாணசுந்தரம் என்பவர்மீது பதுளை பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு நேற்றுமுன் தினம் பதுளை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் மாஜிஸ்டிரேட் திரு. எம் சண்முகலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.
இவ்வழக்கில் குறிப்பிட்டஒரு விழா சம்பந்தப்பட்ட கோட்டைகள் அனுப்பப்பட்டுவிட்டதென்றும் ஆனால் தவிர்க்கமுடியாத காரணத்தால் விழா ஒத்திவைக்கப் பட்டுள்ளதென்றும் பிரயாணத்தை ஆரம்பிக்க வேண்டாமென்றும் பதுளை தர்மதூதாக்கல்லூரி அதிபர் திரு. ஜெபசிங்கா என்பவரின் பெயருடன் பொய்த்தந்தியை உடுப்பிட்டி எம். பிக்கு அனுப்பிவைத்ததாக திரு ஏ கல்யாணசுந்தரத்தின்மீது குற்றஞ் சாட்டப்பட்டிருக்கது
எதிரிதரப்பில் வழக்கறிஞர் திரு மி கணேசலிங்கம், வழக்கறிஞர் திரு எல் எஸ பொன்ராசாவின் உதவியுடன் ஆஜரானார்
மேல்விசாரணை ஜூன்மதாம் 26-ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது —

மாணவர்கள் வேலைநிறுத்தம்

கொழும்பு, செவ்வாய்
களுத்துறை மகாவித்தியாலயம், கத்துக்குருந்தை மகாவித்தியாலயம், புத்துல்லா மகாவித்தியாலயம் ஆகிய மூன்று மகாவித்தியாலயங்களைச் சேர்ந்த மாணவர்கள் தமது ஆசிரியர்கள் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டதை ஆட்சேபித்து வேலைநிறுத்தம் செய்துள்ளனர்.

—

மாணவர்கள்

வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

கொழும்பு, செவ்வாய்
கடந்த 6 மாத காலமாக கொழும்பு கலைக்கல்லூரி மாணவர்களால் நடாத்தப்பட்டு வந்த வேலைநிறுத்தம் கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை கொடுத்தவாக்குறுதியின் பேரில் இன்று காலை கைவிடப்பட்டது.
உடனடியாக அவர்களுடைய கோரிக்கைகளில் சிலவற்றைக் கவனிப்பதாகவும், மூன்று மாத காலத்துக்கு அவர்களுடைய இறுதிப் பரீட்சையை ஒத்திவைப்பதாகவும் மந்திரி மாணவர்களிடம் தெரிவித்தார்.
ஆறு வருடப் போதனையைக் கற்றுத் தேறியவர்கள் ஆசிரியர்கள் பதவிக்கு விண்ணப்பிக்கலாம் என்றும் திரு. இரியகொல்லை தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு மேலும் இரட்டைத் தட்டு பஸ்

சாவகச்சேரி, புதன்
நேற்றிரவு ஐந்து இரட்டைத் தட்டு பஸ்கள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளன. வடபகுதியிலுள்ள பல பகுதிகளிலும் இந்த பஸ்கள் சேவையிலீடுபடுத்தப்படும்.
வடமாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள் தேசியசேவை மந்திரி திரு. வி. ஏ. சுகததாசாவைக் கேட்டுக்கொண்டதற்கிணங்கவே இந்த பஸ்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

—

'சேவை செய்வதே இலட்சியம்'

யாழ்ப்பாணம், புதன்
இங்குள்ள மக்களுக்கு சேவை செய்வதே யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கிளையின் இலட்சியமாகுமென்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் யாழ்ப்பாணக் கிளைக் கூட்டத்துக்குத் தலைமைவகித்துப் பேசிய எஸ இராமச்சந்திரன்பிள்ளை குறிப்பிட்டார்.
இங்குள்ள எந்த அரசியல் கட்சிக்கும் மாறுபாடாகவோ அன்றி அவைகளுக்கு கேடு விளைவிக்கும் வகையிலோ இங்குள்ள இ. தொ. காங்கிரஸ் கிளை நடந்துகொள்ளமாட்டாதென்றும் அவர் தமது பேச்சில் தெரிவித்தார்.
"அண்மையில் தலைமன்னாரில் வீசிய சூறாவழியினால் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே நடைபெற்று வந்த கப்பல் போக்கு வரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் பிரயாணம் தடைப்பட்டுள்ளது. எனவே போக்குவரத்து சேவையை விரைவில் ஏற்படுத்த அரசாங்கம் ஏற்பாடுகள் செய்யவேண்டும்" என்று திரு. வி பி மாதவன் கொண்டு வந்த தீர்மானத்தை மத்திய கமிட்டிக்கு அனுப்பி வைப்பதென கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

—

பொலிஸ் கோஷ்டிக்கு வெற்றி

கிளிநொச்சி, செவ்
கிளிநொச்சி பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் பரந்தன் ரசாயனத் தொழில் சாலை உத்தியோகத்தர்களுக்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வமான கைப்பந்தாட்டப் போட்டியில் கிளிநொச்சிப் பொலிஸ் கோஷ்டியினர் பரந்தன் ரசாயனக் கோஷ்டியினரை 2-1 ஆட்டங்களால் தோற்கடித்தனர். போட்டிக்கு திரு. எக்கனயக்கா மத்தியஸ்தம் வகித்தார். போட்டி கிளிநொச்சி பொலிஸ் மைதானத்தில் நடைபெற்றது

வட்டமேசை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
"தமிழ் பேசும் மக்களின் இழந்த உரிமைகளைப் பெறுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியுடன் தமிழரசுக் கட்சி ஒருவகையான உடன்பாடு செய்துள்ளது; அவர்களுடன் நாங்கள் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போதும் சிம்மாசனப் பிரசங்கத்திலும் தமிழ்ப் பேசும் மக்களுக்கு அவர்களுடைய நியாயமான உரிமைகளை அளிப்பதாக வாக்குறுதி விக்கப்பட்டுள்ளது. இந்த வாக்குறுதி வீண்போகாதென்ற நம்பிக்கையுமஎமக்கிருக்கிறது. இதனால் தான் அரசாங்கத்தை நாம் ஆதரிக்கிறோம். இச்சிலையில் எமக்கிடையில் ஏற்பட்டுள்ள உடன்பாட்டையும் இதன் மூலம் தோன்றியுள்ள சௌஜன்ய உறவையும் கெடுக்கக்கூடிய முறையில் இங்குள்ள சிலர் நடந்துகொள்கிறார்கள். இவ்வித நடவடிக்கைகள் மூலம் நல்ல சூழ்நிலை நீங்கி இழந்த உரிமைகளைப் பெறுவதற்குள்ள நல்ல வாய்ப்பையும் கெடுக்கக்கூடும். இச்செயல்களில் ஈடுபடாது தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்கு அவர்கள் ஒத்துழைக்க வேண்டும்" என்று திரு. நவரத்தினம் கூறினார்.
"வட்டமேசைமகாநாட்டில் பங்குபற்றுவது யார்? எதற்காக வட்டமேசைமகாநாடு? சிறுபான்மையினர் பிரச்சினைத் தீர்ப்பதற்கு இந்த அரசாங்கத்துக்கு ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியும், லங்கா சமசமாஜக்கட்சியும் கம்யூனிஸ்ட்கட்சியும் ஒத்துழைப்பும் ஆதரவும் அளிக்குமா? இதை எதிர்பார்க்கமுடியுமா? என்று திரு. நவரத்தினம் கேட்டார்.

ஒன்றுபட்டு நிற்கவேண்டும்

திருக்கோணமலை எம். பி. திரு எஸ். எம். மாணிக்கராசா பேசுகையில் தமிழ்பேசும் மக்களின் இழந்த உரிமைகளைப்பெறுவதற்கு நல்ல சூழ்நிலையேற்பட்டுள்ளதென்றும் அதைக் கெடுக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். தமிழ்பேசும்மக்கள் தங்களுக்கிடையிலுள்ள வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு நின்றால் தமிழ்பேசும் மக்களின் இழந்த உரிமைகளை சுலபமாகப்பெற முடியுமென்றும் அவர் சொன்னார்.

வழக்கறிஞர் திரு. எம். ஆலாலசுந்தரம் பேசுகையில் பதினேழு வருடங்களுக்கு முன் அரசாங்கத்துடன் சேர்ந்து ஆதரவளித்தவர்களுக்கும் இப்பொழுது தமிழரசுக்கட்சி அரசாங்கத்துடன் சேர்ந்து ஆதரவளிப்பதற்கும் வித்தியாசம் உண்டு என்றார்." பதினேழு வருடங்களுக்குமுன் சேர்ந்தவர்கள் கோரிக்கை நிபந்தனை எதுவுமின்றிச்சேர்ந்தனர். இப்பொழுது தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்கான கோரிக்கையை முன்வைத்தே தமிழரசுக்கட்சி சேர்ந்துள்ளது. அதுமட்டுமல்ல தமிழரசுக்கட்சி அரசாங்கத்துடன் இரண்டறக்கலந்துவிடவுமில்லை. உலையில் சோறு வேகும்போது உலைமூடியில் தண்ணீர்கொதிக்கவைத்து வந்த விருந்தாளிகளுக்கு தேநீர்வைத்துக் கொடுப்பது போன்று சேர்ந்தும்சேராமலும் தமிழரசுக்கட்சி அரசாங்கத்தை உரிமைகளைப்பெறும் பொருட்டு ஆதரிக்கிறதுஎன்று திரு. ஆலாலசுந்தரம் கூறினார்.
உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் ஆகியோரும் மற்றும் பலரும் பேசினர்.

"நாயன்மார்கள் விழாவினால் பிள்ளைகளின் அறிவு வளரும்"

வவுனியா, புதன்
"நமது நாட்டில் உள்ள துன்பங்கள் எல்லாம்போக்க அப்பர், சுந்தரர், நாவுக்கரசர் போன்றவர்களின் தினங்களைக் கொண்டாட வேண்டும். அவ்விதம் கொண்டாடினால் தான் நமது சைவசமயம் நாட்டில் வளரும். கோயில்கள் மட்டுமன்றி மடங்களும் ஆங்காங்கு அமைத்து சமயத்துக்கும் நாயன்மாருக்கும் தொண்டுபுரிய வேண்டுமென்று ஒட்டுசுட்டான் சைவவித்தியாசாலை அதிபர் பண்டிதர் க. பொ மயில்வாகனம் திருஞானசம்பந்தர் குருபூசைவிழாருக்கு தலைமைவகித்து உரையாற்றுகையில் கூறினார்
ஒட்டுசுட்டான் சின்னத்தம்பி வித்தியாலயமண்டபத்தில் நடைபெற்றவிழாவில் திரு மயில்வாகனம் தொடர்ந்து பேசியதாவது:-
"நாயன்மார்களின் தினங்களை பெரியவிழாவாக ஐந்து நாட்களுக்குகொண்டாடவேண்டும் இவ்விதம் நாம் கொண்டாடாவிட்டால் வருங்கால பிள்ளைகள் சைவத்தையும், அதன்மகத்துவத்தைப்பற்றியும் அறியமுடியாது. இப்படிச் செய்வதால் பிள்ளைகளுக்கு எங்களிலும் பார்க்க கூடிய அறிவும், பற்றும் வளரும்
நாயன்மார்கள் இருந்ததால் தான் எமக்கு இன்று பற்பல சமய நூல்களும் பாட்டுக்களும் இனிமையாக அறியக்கூடியதாக உள்ளது. ஆகையால் சைவர்களாகிய யாவரும் நாயன்மாரின் திருவுருவப் படங்களை எடுத்து வைத்து வீடுகளில் நாள்தோறும் வணங்குதல் வேண்டும்"

நூல்நிலையங்களின் உதவி

கோண்டாவில், புதன்
தாவடி காந்தி கலைவளர்ச்சி மன்ற உறுப்பினர்களால் உருவாக்கப்பட்ட வாசிகசாலையை கடந்த செவ்வாய்க்கிழமை உள்ளூராட்சி ஆய்வு உத்தியோகத்தர் திரு வி பி கணேசபிள்ளை திறந்துவைத்துப்பேசுகையில் இன்றைய இளைஞர் சமுதாயத்துக்கு நூல் நிலையங்கள் பெரிதும் உதவி புரிகின்றது என்றும் இளைஞர்களால் உருவாக்கப்படும் நூல்நிலையங்களின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் உழைக்க நாம் தயாரென்றும் தமது உரையில் குறிப்பிட்டார்.
பண்டிதர் கா. இராமையா, திரு. இராசரத்தினம், திரு. வ நமசிவாயம் ஆகியோரும் மன்றஉறுப்பினர்களும் சொற்பொழிவாற்றினார்கள்.
பிரதமவிருந்தினராக உடுவில் கிராமசபைத் தலைவர் ச. முத்துலிங்கமும், உடுவில் கிராமசபை 10-ம்வட்டார அங்கத்தவர் எச். இராசதுரை ஆகியோரும் கலந்து கொண்டார்கள். கூட்ட இறுதியில் வாசிகசாலை நிர்வாக உறுப்பினர் தெரிவு நடைபெற்றது.

—

வெங்காயம் உருளைக்கிழங்கு தட்டுப்பாடு நீங்கும்

பம்பலப்பிட்டி, புதன்
பம்பாய் வெங்காயம், உருளைக்கிழங்கு முதலியனவற்றின் தட்டுப்பாடு அடுத்தவார இறுதியில் முடிவடையுமென உணவு மந்திரி திரு. எம். டி. பண்டா உறுதியளித்துள்ளார்.
வர்த்தக சங்கங்களுடனும் உணவுக் கட்டுப்பாட்டதிகாரியுடனும் நேற்று நடாத்திய மகாநாடொன்றில் மந்திரி மேற்கண்ட கருத்தைத் தெரிவித்தார்.
இலங்கையில் உணவுப் பொருட்கள் இறக்குமதிசெய்யும் சங்கங்களின் பிரதிநிதிகள் தங்களிடமுள்ள வெங்காயம் உருளைக்கிழங்கு முதலியவற்றை அடுத்தவாரம் வெளியிடங்களில் விநியோகம் செய்வதற்கு அனுப்புவதாக உறுதி கூறியுள்ளனர்.
சென்ற வாரம் ஒரு ரூத்தல் வெங்காயம் 25 சதமாக விற்பனை செய்யப்பட்டதென்றும், இன்னமும் வெங்காயத்தின் விலை 20 சதமாகக் குறையுமெனத் தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் வர்த்தகர்கள் மந்திரிக்குக் கருத்துத் தெரிவித்தனர்.

—

பின் திரு. கதிரவேலுப்பிள்ளை தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், தமிழ் பேசும் இனம் உரிமை பெறும் இனமாக இருக்கவேண்டுமேயன்றி சலுகை பெறும் இனமாக இருக்கக் கூடாதென்றார், தமிழ்பேசும் மக்களுக்கு அடிப்படைஉரிமை வழங்க வேண்டுமெனக் கோரும் அதேசமயம் தமிழ் பேசும் மக்களில் ஒருபகுதியினருக்கு உரிமை வழங்க மறுக்கப்படாது என்றார்.

கல்வி மந்திரி எச்சரிக்கை

பிலியந்தலை, புதன்
அரசாங்க ஊழியர்கள் தொடர்ந்தும் தேசிய அரசாங்கத்திற்கெதிரான நடவடிக்கைகளில்ஈடுபட்டால் எங்கள் அரசாங்கம் அப்படி நடப்பவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும்! என்று கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை கயாலசந்தியில் தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பொன்றில் பேசும் பொழுது குறிப்பிட்டார்.

—

நோயாளர் அவதி

காங்கேசன்துறை, புதன்
காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் போதிய அப்போதிக்கரிமார் இல்லாத காரணத்தினால் நோயாளிகள் காலை முதல் மாலை வரை சிகிச்சைக்காகக் காத்து நிற்கவேண்டியிருப்பதாகத் தெரிகிறது.
மாணவர்கள் தங்கள் சமயக் கல்வியில் நாட்டமுடையவர்களாகத் திகழவேண்டும் சமயப் பெரியார்கள் காட்டியநெறியில் வாழ்ந்துவரவேண்டியதும் அவசியமாகும்.
தலைமையாசிரியர் வித்துவான் இ. திருநாவுக்கரசுவும் மற்றும் பலரும் உரை நிகழ்த்தினர். நண்பகல் மகேசுர பூசை நடைபெற்றது.

—

திருட்டு! திருட்டு!! திருட்டு!!!

கொழும்பு, புதன்
இரத்மலானை, வெள்ளவத்தை, புறக்கோட்டை முதலிய இடங்களில் களவுகள் நடைபெற்றுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது. இரத்மலானையில் ஒரு வீட்டில் திருடர்கள் சென்று ரூ. 3000 பெறுமதியான நகைகளைக் களவாடிச் சென்றுள்ளனர். வெள்ளவத்தையில் ஒரு வீட்டில் கள்வர் சென்று 3000 ரூபா பெறுமதியான நகைகளைக் களவாடிச் சென்றுள்ளார்கள். கொழும்பிலுள்ள துரை அருள் என்ற மைதானத்தில் 2000 ரூபா பெறுமதியான இயிட்டேசன் நகைகளை களவாடிச் சென்றுள்ளனர்.

—

ஓய்வுபெறும் வயது

கொழும்பு, செவ்வாய்
பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஓய்வுபெற வேண்டிய வயதை பத்துவருடம் கூட்டவேண்டுமென்று பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. எஸ். ஏ. திசநாயக்கா கருத்து தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 53-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு மே மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org